# 20,000 பொருட்களை இதுவரை பாரமேற்றனர்

Registered as a Newspaper in Ceylon

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (5-10-66) இதழ் 236

பராபவ புரட்டாதி 19 ஜமாதுல் ஆகிர் 19 புதன்கிழமை

யாழ்ப்பாணம், புதன்

விதவிதமான இருபதினாயிரம் பொருட்கள் இதுவரை கந்தரோடையிலிருந்து யாழ்ப்பாணம் நூதனசாலைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

கடந்த 3 தினங்களாக கந்தரோடை புதைபொருளாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களை, யாழ்ப்பாணம் நூதனசாலை உத்தியோகத்தர்கள் பாரமேற்று வருகின்றனர்.

தந்தத்தினால் செய்யப்பட்ட மணிகளும், தங்க மணிகளும், பல வர்ணமணிகளும் இவற்றுள் காணப்பட்டன.

கந்தரோடைப் பொருட்கள், யாழ். நூதனசாலையில் இன்னும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படவில்லை. பாரமேற்கும் வேலைகள் முடிவடைந்த பின்புதான் பொருட்கள் பார்வைக்கு வைக்கப்படுமென அறியப்படுகிறது.

## அரிசிபற்றிய மகாநாடு

புதுடில்லி அக். 4

14 நாடுகளைக் கொண்ட அரிசி பற்றிய மகாநாடு ஒன்று இங்கு நேற்று ஆரம்பமாகியது.

இம் மகாநாட்டில் ஆசிய நாடுகள் மேலதிக உணவு உற்பத்தி செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

## மாணவருக்கு இந்திரா புத்திமதி

புதுடில்லி, அக். 4

மாணவர்கள் அரசியல்வாதிகளின் கைப்பொம்மைகளாகிவிடக்கூடாது என இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்று நேபாளத்துக்கு செல்லுமுன் விடுத்த செய்தியில் தெரிவித்தார்.

மாணவர்கள் தமது குறைபாடுகளை முறையான வழியில் தெரிவிக்கவேண்டுமெனவும் இக்குறைபாடுகள் நிச்சயம் கவனிக்கப்படுமென்றும் தெருக்களில் நின்று கூச்சலிடுவதால் உரிமைகளைப் பெற்றுவிடலாம் என நம்புவது புத்திசாலித்தனமானதல்ல எனவும் அவர் கூறினார். மாணவர்கள் தமது குறைபாடுகளைத் தெரிவிக்கக்கூடிய ஒரு ஸ்தாபனம் இருப்பது நல்லது என்றும் அவர் ஆலோசனை தெரிவித்தார்.

## சேலம் இரும்புத் தொழிற்சாலை

சென்னை, அக் 4

சேலம் இரும்புத் தொழிற்சாலை வந்தே தீரும் என்று தமிழ்நாடு முதல் மந்திரி திரு. பக்தவத்சலம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு

# சர்வகலாசாலையில் புதிய தமிழ் பிரிவு

## தேசிய கல்விச்சபை செய்துள்ள முடிவு

கொழும்பு, செவ்.

இன்று காலை டாக்டர் ஜி. பி. மலலசேகரவின் தலைமையில் கூடிய தேசிய கல்விச்சபை, கொழும்பிலுள்ள சர்வகலாசாலையிலும் ஒரு புதிய தமிழ்ப் பிரிவை ஏற்படுத்துவதென முடிவு செய்துள்ளது.

தற்பொழுது பேராதனை சர்வகலாசாலையில் மட்டுமே தமிழ் மாணவர்களுக்கு தமிழ் மூலம் கல்வி புகட்டப்பட்டு வருகின்றது. இப் புதிய முடிவைத் தொடர்ந்து மேலதிகமாக மாணவர்கள் இவ்வாண்டில் சர்வகலாசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவர் எனத் தெரியவருகிறது. இவ்வாண்டில் மொத்தமாக 3000 மாணவர்கள் அனுமதிக்கப்பட இருக்கின்றனர்.

வித்தியோதய வித்தியாலங்கார சர்வகலாசாலைகளுக்கு மாணவிகளும் புதிய தவணையில் அனுமதிக்கப்பட இருக்கின்றனர். சில காலத்தின் பின்னர் வித்தியோதய, வித்தியலாங்கார சர்வகலாசாலைகளிலும் தமிழ்ப்பிரிவு ஏற்படுத்துவது பற்றி ஆராய்வதென தேசிய கல்விசபை தீர்மானித்துள்ளது.

சர்வகலாசாலைகளின் அனுமதி வசதிக்கேற்ப மாணவர்கள் விரும்பும் இடங்களில் கல்வி பயில கூடியளவு சந்தர்ப்பமளிக்க வேண்டுமெனவும் தேசிய கல்வி சபை முடிவு செய்துள்ளது.

கொழும்பிலுள்ள சர்வகலாசாலைகளிலும் தமிழ் பிரிவு ஏற்படுத்த வேண்டுமெனத் தமிழரசுக் கட்சியினர் பலகாலமாக கோரி வந்துள்ளனரென்பது குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி ஊழியருக்கு முதலிடம் அளிக்கப்படும்

யாழ்ப்பாணம், புதன்

எதிர்காலத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் புதிய கணக்காளர்களை நியமனஞ் செய்யும்போது, ஏற்கனவே உள்ளூராட்சிச் சேவையிலுள்ளவர்களில் ஐம்பது வீதமானவர்களுக்கு முதலிடம் வழங்கிய பின்னரே ஏனையவர்களை வெளியிலிருந்து தெரிவுசெய்யப்படுவர்.

ஆறுவருடங்கள் கணக்குப்பதிவாளர்களாக உள்ளூராட்சிச் சேவையில் கடமையாற்றிய எல்லோரும் உள்ளூராட்சிச் சேவையில் காலியாகவுள்ள கணக்காளர் பதவிக்குப் போட்டியிடலாம். இத்தகவலை உள்ளூராட்சிச் சேவைக் கணக்காளர் சங்கச் செயலாளர் வி. கே. சிவஞானம்

(5-ம் பக்கம் பார்க்க)

வெள்ளத்தினால்

# 1 லட்சம் பேர் வீடிழந்தனர்

கொழும்பு, செவ்வாய்

சமீபத்தில் வெள்ளத்தினால் சுமார் ஒரு லட்சம் பேர் வீடிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும், களுத்துறை, இரத்தினபுரி, காலி, கேகாலை ஆகிய இடங்களிலேயே வெள்ளத்தினால் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை ரூபா 5 லட்சம் வரையான நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது. சர்வதேச சமூக சேவை ஸ்தாபனங்களும் சுகாதாரப்பகுதியும் பாதிக்கப் பட்டவர்களுக்கு நிவாரண உதவி அளித்துவருகின்றன. புனர் நிர்மாண வேலைகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

### கூப்பன் கிடைக்கும்

வெள்ளத்தில் தமது பங்கீட்டரிசிப் புத்தகங்களை இழந்தவர்களுக்கு மீண்டும் புதிய பங்கீட்டரிசிப் புத்தகங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்பொழுது பல இடங்களில் வெள்ளம் வழிந்தோடிக்கொண்டிருப்பதாகவும் களனிகங்கை நீர்மட்டம் குறைந்துவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோடீஸ்வரன் வழக்கு

## சொலிசிட்டர் ஜெனரல் வாதம்

கொழும்பு, செவ்வாய்

கோடீஸ்வரன் வழக்கு தீர்ப்பை ஆட்சேபித்து அரசாங்க சார்பில் சொலிசிட்டர் ஜெனரல் தொடர்ந்திருந்த வழக்கு இன்று நீதியரசர் திரு. ஏச். என். ஜி. பெர்னாண்டோ, திரு. பி. ஏ. சில்வா ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சொலிசிட்டர் ஜெனரல் திரு. தென்னக்கோன் திரு. கோடீஸ்வரன் சிங்கள மொழியில் கருமமாற்ற வேண்டியிருப்பதாக மாவட்ட நீதிபதி தமது தீர்ப்பில் தெரிவித்த கருத்து பிழையானது எனவும் ஆங்கிலத்தில் கருமமாற்றுவதென உடன்பாடுடனேயே கோடீஸ்வரன் அரசாங்க சேவையில் சேர்ந்தார் என்று நீதிபதி குறிப்

(8-ம் பக்கம் பார்க்க)

## தொழிற்பயிற்சி விஸ்தரிப்பு

கொழும்பு, செவ்

கைத்தொழில் பயிற்சியை விஸ்தரிப்பதற்கான திட்டத்துக்கு 2 லட்சம் ரூபா செலவில் தச்சு நிலையங்களும் கட்டுமான வேலைகள் பயிற்சி நிலையங்களும் அமைக்கப்படவிருக்கின்றன,

# கைத்தொழில்தகராறு விசாரணை

கொழும்பு, செவ்

'தொழிலாளி முதலாளிகளுக்கிடையிலான தொழில் தகராறுகளை சுமுகமாகத் தீர்த்து இரு சாராருக்கிடையிலும் நல்லுறவை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராயவே கைத்தொழில் தகராறு சமரச தீர்வு சபை நியமிக்கப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் திரு' எச். டபிள்யு. ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இச்சபையிடம் பொதுமக்கள் தாம் எவ்வகையில் எவ்வித விஷயங்களைத் தெரிவிக்க வேண்டுமென்பதை இவருவில் தெரிந்து கொள்ளும்

(8-ம் பக்கம் பார்க்க)

## C. W. E. ஜவுளிகள்

8-10-66 தொடக்கம்

எமது ஸ்தாபனத்தில் (C.W.E.) கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தாரின் ஜவுளி வகைகளை சகல ஜவுளி வர்த்தகர்களும் மொத்தமாகக் கொள்வனவு செய்து கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

# ஆ. அப்பையா அன் கோ.,

(C.W.E. பிரதான மொத்த விற்பனையாளர்கள்)

82, கே. கே. எஸ். றோட், — யாழ்ப்பாணம்.

போன்: 506

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற் பிணக்கு ஆணைக்குழு

இணக்கம், மத்தியஸ்தம், சமரசம் ஆகியன மூலம் தொழிற்பிணக்குகளைத் தீர்க்கும் - நடைமுறை, அனுட்டானம் ஆகியனபற்றி விசாரணை செய்தற்கென மேன்மைதங்கிய மகாதேசாதிபதியவர்களால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு சாட்சியம் சமர்ப்பிக்குமாறு கோரி, பொது அழைப்பொன்றை வெளியிடத் தீர்மானித்திருக்கிறது.

2. ஆணைக்குழுவின் விசாரணை அலுவல் நியதிகள் பின்வருமாறு:

1. இணக்கம் மத்தியஸ்தம் சமரசம் ஆகியனமூலம் தொழிற் பிணக்குகளைத் தீர்க்கும் நடைமுறை, அனுட்டானம் ஆகியனபற்றி விசாரணை செய்து, அத்தகைய பிணக்குகளைத் தீர்ப்பதில் மேலான திறமையும் துரிதமும் ஏற்படச் செய்தற்குவேண்டிய முறைகளைச் சிபார்சு செய்தல்.
2. தொழில் நீதிமன்றங்கள் ஆகியவற்றின் நடைமுறை, அனுட்டானம், நிருவாகம் ஆகியனபற்றி விசாரணை செய்து அந்நீதி மன்றங்களிடமும் விசாரணை மன்றங்களிடமும் சமர்ப்பிக்கப்படும் தொழிற் பிணக்குகளைத் தீர்ப்பதில் மேலான திறமையும் துரிதமும் ஏற்படச் செய்யும்வண்ணம் சட்டம், அனுட்டானம் அந்நீதிமன்றங்களினதும், விசாரணைமன்றங்களினதும் நிருவாகம் ஆகியன பற்றிய விடயங்களில் வேண்டிய சீர்திருத்தங்களைச் சிபார்சு செய்தல்.
3. பின்னர் திருத்தியமைக்கப்பட்டவாறுள்ள (131-ம் அத்தியாயமாகிய) தொழிற்பிணக்குச் சட்டத்தைப் பரிசீலனை செய்து-
   (அ) இலங்கையின் பொருளாதார, சமூக முன்னேற்றத்தையும் இதமானதும் இசைவானதுமாகிய தொழில் உறவைப் பேணும் அவசியத்தையும் கருத்திற் கொண்டு, தொழிற் பிணக்குகளைத் திறமையாகவும், துரிதமாகவும் தீர்த்தலை உறுதி செய்தற்கு அச்சட்டத்தின் ஏற்பாடுகள் போதியனவாவெனவும்,
   (ஆ) இல்லையாயின், மேற்கூறிய சட்டம் ஏற்றவாறு திருத்தியமைக்கப்பட வேண்டுமோ அல்லது அதற்குப் பதிலாகப் புதியதொழிற் பிணக்குச் சட்டமொன்று இயற்றப்பட வேண்டுமா எனவும்,

   அறிக்கையிடுதல்,
4. பின்வரும் விடயங்களுக்கு விசேட கவனம் செலுத்தி, வேண்டுமாயின் புதிய தொழிற் பிணக்குச் சட்டமொன்றின் நகலை அல்லது அதற்கு மாற்றாக, இப்போதைய தொழிற் பிணக்குச் சட்டத்திற்குத் தேவையான திருத்தங்களின் நகலொன்றைத் தயாரித்துச் சமர்ப்பித்தல்:-
   (அ) தொழிற் பிணக்குப்பற்றிய விடயங்களில், தொழில் அமைச்சர், தொழில் அமைச்சின் நிரந்தரச் செயலாளர், தொழில் ஆதிபர், அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள், மத்தியஸ்தர்கள் ஆகியோரினதும், தொழில் விசாரணை மன்றங்கள், தொழில் நீதிமன்றங்கள் ஆகியனவற்றினதும் அதிகாரங்களும் கடமைகளும்.
   (ஆ) தொழிற்பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டிய ஆட்களின் நியமனங்களும் தகுதிகளும்.
   (இ) மத்தியஸ்தரின் தீர்ப்புக்களை நடைமுறையில் கொண்டுவருதல்.
   (ஈ) நேர்மையற்ற தொழில் அனுட்டானங்களும் பரிகாரங்களும்.
5. மேற்கூறிய விடயங்கள் பற்றியும், அவற்றுடன் சம்பந்தப்பட்ட அல்லது அவற்றிலிருந்து எழுகின்றனவும் முறைப்பாடு பெறப்பட்டனவுமான மற்றும் எவ்விடயம்பற்றியும் ஆணைக்குழுவினது விசாரணையின் பயனாக வேண்டியனவெனக் கருதப்படும் சிபாரிசுகளை, குறிப்பாக வேலைக்கமர்த்துபவர் - ஊழியரிடையே உறவைச் சீர்திருத்துதற்குக் கையாளப்பட வேண்டிய முறைகள் பற்றி, செய்தல்.

3. மேற்கூறிய விசாரணை அலுவல் நியதிகளுள் ஒன்றுபற்றி அல்லது அவை யாவும்பற்றிச் சாட்சியம் சமர்ப்பிக்க விரும்பும் ஒருவர் அல்லது குழுவினர் எழுத்தில் விஞ்ஞாபனமொன்றிற் கூறி, ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பி வைக்கும்படி இத்தாற் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. அத்தகைய சாட்சியம் சமர்ப்பிக்க விரும்புவோருக்கு உதவிபுரியும்வண்ணம் வினாத் தொடரொன்றை ஆணைக்குழு தயாரித்துள்ளது. இதைப் பெற விரும்புவோர் செயலாளருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். பிரதானமாக, வினாத் தொடரிற் கேட்கப்படுவனவற்றிற்கு அமைய சாட்சியம் சமர்ப்பிக்கப்படின் உதவியாயிருக்கும். கூடுதலான சாட்சியமெதையும் துணைவிஞ்ஞாபனமாக அனுப்பலாம்,

5. கேட்கப்படும் எழுத்துமூலமான சாட்சியத்திலுள்ள யாதாயினும் விடயத்தைத் தெளிவுபடுத்தும் பொருட்டன்றி, வாய்மூல சாட்சியம் பெறுவதற்கு எவரையேனும் ஆணைக்குழு இப்பொழுது அழைக்க உத்தேசமில்லை.

6. தனக்குக் கிடைத்த சாட்சியமெதையும் பிரசுரிக்குமுரிமை ஆணைக்குழுவிற்கு உண்டு. ஆயினும் அத்தகைய சாட்சியம் முழுவதையும் அல்லது அதன் பகுதியொன்றை அந்தரங்கமானதாகக் கருதுமாறு செய்யப்படும் வேண்டுகோளெதையும் சீர்தூக்கிப் பார்க்க ஆணைக்குழு தயாராகவிருக்கும்.

7. வினாத்தொடர்கள் கோரி எழுத்துமூலம் செய்யப்படும் விண்ணப்பங்கள், எந்த மொழியில் தேவையெனக் குறிப்பிட்டு 14-10-66-ந் தேதியன்று அல்லது அதற்கு முன்பு பின்வருமாறு செயலாளருக்கு விலாசமிட்டு அனுப்பவேண்டும்.

செயலாளர், தொழிற்பிணக்கு ஆணைக்குழு, இல. 6, பெஜட்ரோட், கொழும்பு 5.

8. வினாத்தொடர்களின் தகவல் பிரதிகளையும் மேற்கூறிய விலாசத்திலுள்ள ஆணைக்குழுவிற்கு விண்ணப்பம்செய்து, பொதுமக்கள் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். எஸ். வசுந்தரா
செயலாளர்.

5-10-66.

## கேள்வி விளம்பரம்

1. ஒப்பந்தவேலை, 1-ம் வட்டாரம் தச்சக்கடவைத் தெரு அமைத்தல்.
2. (1) கேள்விப் பத்திரம் கொடுத்தல் 22-10-66 பிற்பகல் 3-00 மணி வரையும்.
   (2) ஏற்றல்.....23-10-66 முற்பகல் 10-00 மணி வரையும்.
3. தகுதி: (1) ஏ. பி குரூப் ஒப்பந்தக்காரர்கள்.
   (2) கேள்விப்பத்திரப் பணம் ரூபா 25/- இருபத்தைந்து.
4. விபரங்கள் அறிதல், புத்தூர் கிராமசபை அலுவலகத்தில்.

சி. நடராசா
தலைவர்
கி. ச. புத்தூர்.

கிராமசபை அலுவலகம்,
புத்தூர். 2-10-1966

1307

## அறிவித்தல்

1966-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 19-ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை ஊர்காவற்றுறைப் பட்டினசபைத் தலைவரால் மண்குளி ஒழுங்கைக்கு, 250 அடிக்கு, கற்கள் பரவித் தார்போடும் வேலைக்குச் சீல்வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ச. ம. அல்பிறட்,
தலைவர்
பட்டினசபை,
ஊர்காவற்றுறை.

3-10-66. 1306




### கொழும்பு
### புதன் 5 - 10 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 படத்திலிருந்து.

இரவு 6-10 கிராமச்செய்திகள், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 விவாத மேடை, 7-15 பாட்டு—எஸ். கணபதிப்பிள்ளை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 புல்லாங்குழல். 9-30 பாட்டு—ராஜேஸ்வர தெட்சணாமூர்த்தி, 10-00 நேயர் விருப்பம்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## நூல் வெளியிடுவார்

சுழிபுரம், செவ்.

சுழிபுரத்தைச் சேர்ந்த திரு. இ. பாலசுப்பிரமணியம் நைஜீரியாவில் கல்வி கற்பித்து வருகின்றார். உலக நாடுகள் சுற்றுப்பயணத்தை தமது விடுமுறையின்போது மேற்கொண்ட இவர் கடந்த இரண்டு மாதத்தை தனது சொந்தக் கிராமமான சுழிபுரத்தில் கழித்தார். இவர் உலக சுற்றுப்பிரயாணத்தின்போது பெற்ற அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு நூல் வெளியிட எண்ணியுள்ளார்.

## பஸ் - சைக்கிள் விபத்து

### பிரயாணிக்கு காயம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

ஒற்றை வழிப்பாதையான யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் நேற்று நண்பகல் நடந்த பஸ் - சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வயோதிபருக்கு காயங்கள் ஏற்படவில்லை. ஆனால் பஸ்ஸில் பிரயாணம் செய்துகொண்டிருந்த பெண்ணுக்கு தலையில் காயமேற்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் சென்றுகொண்டிருந்த இந்த பஸ் விபத்து நடைபெற்ற இடத்தில் நிறுத்தப்பட்டது. சைக்கிளுக்கு சேதமேற்பட்டது. பொலிசார் வந்து போக்குவரத்து ஒழுங்கை சீர் செய்தனர்.

## வாளினால் தாக்க முயற்சித்தாராம்

யாழ்ப்பாணம், புதன்

ஒரு பெண்ணை வாள்கொண்டு வெட்ட முயற்சித்தாராம், மற்றொரு பெண். வெட்ட முயற்சித்த பெண் மீது பொலிஸார் வழக்கு தாக்கல்செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பதில் நீதிபதி திரு. எஸ். சி. கதிரவேலு முன்னிலையில் இவ்வழக்கு நேற்றுக்காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த சின்னராசா அன்னலட்சுமி என்பவரை, தம்பித்துரை நாகரத்தினம் என்பவர் பேசியதாகவும், வாள்கொண்டுவெட்ட முயற்சித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. எதிரி சார்பில் புறக்டர் தளையசிங்கம் யோகநாதன் ஆஜரானார்.

பதில் மாஜிஸ்டிரேட் எதிரியை, 150 ரூபா பிணையில் செல்ல உத்தரவிட்டு, விசாரணையை 9-ந் திகதிவரை ஒத்திவைத்தார்.

## பாரதி விழா

கொக்குவில், செவ்வாய்

கொக்குவில் சனசமூகநிலையத்தினர் பாரதி விழாவை சிறப்பாக கொண்டாடினர். விழாவிற்கு திரு. க. த. இராசா தலைமை வகித்தார் திருவாளர்கள் கே. டானியல் வீ. ஏ. கந்தசாமி ஆகியோர் பேசினர்.

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

**கோழிகள்**

எட்டு மாத நாட்டுச் சேவல்கள் ரூபா 5/- முதல் ரூபா 12/- வரை, வளர்ப்பதற்குரிய பாற்கொக் வெள்ளை லெக்கோன் எட்டு மாதச் சேவல்கள் ரூபா 9/- வளர்ப்பதற்குரிய கறுப்பு லெக்கோன் 6 மாதச் சேவல்கள் ரூபா 7/-. பொ. நடராசா J. P. இளைப்பாறிய போஸ்ட்மாஸ்டர், ஊரெழு மேற்கு. 1401

## கடுகதி பஸ்கள் கைதடியில் நிற்கும்

யாழ்ப்பாணம், புதன்

கடுகதி பஸ்கள் இனிமேல் கைதடி சந்தியிலும் நிற்கும் தூர இடங்களுக்குச் செல்லும் பிரயாணிகள், கடுகதி பஸ்களில் கைதடி சந்தியிலிருந்து ஏறலாம். கைதடி சந்தியில் கடுகதி பஸ்கள் நிறுத்தப்படவில்லை என பிரயாணிகள் செய்துகொண்ட புகாரைத் தொடர்ந்து பஸ் ஊழியர்களுக்கு கடுகதி பஸ்களை கைதடிச் சந்தியிலும் நிறுத்தும்படி அறிவிக்கப்பட்டுள்ளது கடுகதி பஸ்கள் இயக்கச்சியிலும் நிற்கும்,

### உலக

## தொண்டர்சபை

### நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், புதன்

உலகசேவை தொண்டர் சபையின் இலங்கைக் கிளை, இந்தியா, பாகிஸ்தான், யூனைப் சுவிற்சலாந்து, மேற்கு ஜெர்மனி ஆகிய வெளிநாடுகளுக்கு இலங்கையிலுள்ள தொண்டர்களை அனுப்ப முடிவுசெய்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள மேற்படி சபைத் தொண்டர்களை நேர்முகப் பரீட்சைக்காக அழைத்திருக்கிறது. இப் பரீட்சை கண்டி பல்கலைக்கழக செனட் கட்டிடத்தில் ஒக்டோபர் 6-ந் திகதி நடைபெறும்.

## கீரிமலை சண்டிலிப்பாய் பஸ்பிரயாணிகள் புகார்

சண்டிலிப்பாய், செவ்,

யாழ்ப்பாண நகரில் கடமையாற்றும் அரசாங்கஊழியர்களும், வர்த்தக ஸ்தாபனங்களில் கடமையாற்றும் ஊழியர்களும் நேரத்திற்கு தங்கள் வேலைத் தலங்களுக்குச்செல்லமுடியாது கஷ்டமடைவதுடன், தங்கள் வீடுகளுக்கும் செல்லமுடியாது கஷ்டமடைகின்றனர். எனவே இதற்கு புதிய ஒரு அமைப்பில் இ. போ. ச. பஸ் சேவை நடைபெறுவதற்குரிய ஒழுங்கு அட்டவணையையோ அல்லது தனிப்பட்ட வான் சேவையையோ அமைத்துத்தர வேண்டிய ஒழுங்குகளைச் செய்துதரும்படி யாழ். அரசாங்க அதிபரையும், இ. போ. ச. பிரதேச அதிகாரியையும் கீரிமலை-சண்டிலிப்பாய் பஸ் பிரயாணிகள் சங்கம் கோரியுள்ளது.

நவீன வீட்டுத் தளபாடங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்
பாஷன் பேணிஷிங் பலெஸ்
5-7 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாஷ்கண்ட் அடிப்படையில் பேச்சு வார்த்தைகள்

## பாகிஸ்தானுடன் தொடர இந்தியா ஆவல்

நியுயோர்க், அக். 5

டாஷ்கண்ட் உடன்படிக்கையின் அடிப்படையில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையேதொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடப்பதில் இந்தியாவுக்கு நம்பிக்கைஇருப்பதாக அதன் வெளிவிவகார மந்திரி திரு. சுவர்ண்சிங் இங்கு பத்திரிகையாளரிடம் பேசுகையில் கூறினர்.

**காஷ்மீர்**

''காஷ்மீர் பற்றி இந்த அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் நடாத்த இந்தியா தயாராயிருக்கிறதா'' என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில், இரு நாடுகளையும் பிளவுபடுத்தும் சகல பிரச்னைகளும் ஆராயப்படும்போது காஷ்மீரும் இடம் பெறலாமே தவிர, அதைத் தனிப்பட்ட முறையில்விவாதிக்க இந்தியாசம்மதிக்காது என திரு. சுவர்ண்சிங் கூறினர்.

**வியட்னும்**

வியட்னும் பற்றி அவரைப் பத்திரிகை நிருபர்கள் கேள்வி கேட்டபோது, அண்மையில் ஐ. நா.வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலேயே வியட்னுமில் சமாதானத்தை நிலைநாட்ட முடியுமென இந்தியா கருதுவதாகக் கூறினர். வடவியட்னுமில் தனது குண்டுவீச்சை அமெரிக்கா நிறுத்தினல் தான் வியட்னுமில் சமாதானம் ஏற்படவழி பிறக்குமென முன்னர் இந்தியா வெளியிட்ட கருத்தையே திரு. சுவர்ண்சிங் மீண்டும் வற்புறுத்தினர்.

**சீன**

சீனவைப் பற்றிக் குறிப்பிடுகையில், அது பாண்டுங் மகாநாட்டில் பிரகடனப் படுத்தப்பட்ட சமாதான சகவாழ்வுக் கொள்கையைக் கைவிட்டு விட்டதாகத் திரு. சுவர்ண்சிங் கூறினர்.

# சுகர்னேவை எதிர்த்து மாணவர் ஆர்ப்பாட்டம்

## 40 பேர் காயம்

ஜாகர்த்தா, ஒக். 4

ஜனதிபதி சுகர்னேவுக்கு எதிராக ஜாகர்த்தாவில் ஆயிரக்கணக்கான இளம் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த ஆர்ப்பாட்டங்களில் துருப்புக்களுடன் நடந்த கைகலப்பில் 50 மாணவர்கள்வரை காயப்பட்டனர்.

ஜனதிபதி சுகர்னேவையும், முன்னுள் வெளிவிவகார மந்திரி டாக்டர் சுபந்திரியோவை விசாரிக்கும் இராணுவ கோர்ட்டின்முன் விசாரணைக்கு அழைக்க வேண்டுமென்று மாணவர்கள் கோரினர்.

**சுபாந்திரியோ விசாரணை**

இதற்கிடையில், தொடர்ந்து நடைபெற்ற விசாரணையின்போது அரசாங்கக் கொள்கை மீது இந்தோனேஷிய கொம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கிருந்ததாக டாக்டர்சுபாந்திரியோ ஒப்புக்கொண்டார். சீனவுடன் இந்தோனேஷியா நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டுமென்று கொம்யூனிஸ்ட்கட்சிகோரியதாகவும் அவர் அறிவித்தார்.

இந்தோனேஷியாவின் மலேஷிய எதிர்ப்புக்கொள்கைக்கு உதவியாகச் சீன 100, 000 ஆயுதங்களைத் தருவதற்கு உறுதியளித்திருந்ததாகவும் டாக்டர் சுபந்திரியோ தெரிவித்தார்.

# பெண்ணைக் கடத்திய வழக்கு: ஏழு பேர் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், புதன்

அத்தியடி பெண்கடத்தல் வழக்கு டிசம்பர் மாதம் 8, 9ந் தேதிகளில் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படும்.

நேற்றுக் காலை இவ்வழக்கு யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. என். எம் ஜே. இராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையைப் பார்ப்பதற்காக கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானேர் திரண்டிருந்தனர்.

இவ்வழக்கில் 1964ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ந் தேதி, அத்தியடியைச் சேர்ந்த 15 வயதான, ராஜரத்தினம் மகள் சந்திராவைக் கடத்தும்பொருட்டு தனியசிங்கம் பாலசுப்பிரமணியம், இராமு கந்தசாமி எம். தனியசிங்கம், தனியசிங்கம் மனைவி கனகம்மா' பொன்னம்பலம், குமாரசுந்தரம், பொன்னம்பலம் விஜயசந்திரன் அல்லது மனேகரன், கிருஷ்ணபிள்ளை பத்மநாதன் ஆகியோர் சட்டவிரோதமாகக் கூடியதாகவும், அதேயிடத்தில் அதே சமயத்தில் 1ம், 2ம், 3ம் எதிரிகள் சந்திராவை கடத்தியதாகவும், அதேயிடத்தில் பயங்கர ஆயுதங்களான கொடுவாக்கத்தி, பொல்லுகளுடன் சட்டவிரோதமாகக் கூடியதாகவும், கனகசபை ராஜரத்தினம் என்பவர்மீது பலாத்காரம் பிரயோகித்ததாகவும், ராஜரத்தினம் மனைவி யோகேஸ்வரிக்கு 3ம் எதிரி காயம் விளைவித்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் என். நாகராஜா, புரக்டர் என். சி கதிரவேலுவின் அனுசரணையுடன் ஆஜராளுர். வழக்காளி தரப்பில் முடிக்குரிய அட்வகேட் வி. என். தர்மலிங்கம் ஆஜராளுர். நீதிபதி விசாரணையை டிசம்பர் 8, 9ந் தேதிகளுக்கு ஒத்திவைத்தார்.

# புதிய சுதந்திர ஆபிரிக்க நாடு

புதுடில்லி, அக்.4

பிரிட்டன் ஆதிக்கத்தின் கீழ் 80 வருடங்களுக்கு மேல் இருந்துவந்த ஆபிரிக்க நாடான பெசுட்டோலாந்து நேற்றுச் சுதந்திர நாடாக 'லியாத்தோ' என்ற புதுப் பெயரில் பிரகடனப்படுத்தப்பட்டது: புதியநாட்டை வாழ்த்தி இந்திய ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனும், பிரதமர் திருமதி இந்திராகாந்தியும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியுள்ளனர்.

# பேச்சுக்கள் நடத்த கம்யூனிஸ்ட் அச்சம்

## தாய்லாந்து மந்திரி கூறுகிறர்

நியூயோர்க், ஒக். 4

வியட்னும் யுத்தத்திற்கு சமரசம் காணும் முகமாக பேச்சுவார்த்தைகள் நடாத்த கம்யூனிஸ்டுகள் அஞ்சுகின்றனர். ஏனெனில், அவர்கள் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்தால் துருப்புக்கள் களையிழந்து விடும். இதனுல் ஆக்கிரமிப்புத் திட்டங்கள் அனைத்துமே தவிடுபொடியாகிவிடுமென தாய்லாந்தின் வெளிநாட்டு மந்திரி தெரிவித்தார்.

'அமெரிக்கக்குரல்' (வாய்ஸ் ஒவ் அமெரிக்கா) ஒலிபரப்பிற்காக ஒழுங்கு செய்யப்பட்ட ''அமெரிக்க நிருபர் மகாநாடு'' எனும் நிகழ்ச்சிக்குப் பேட்டியளிக்கையில் அமைச்சர் தனுத் கோமம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் யுத்தத்தைச் சீக்கிரமான முடிவிற்குக் கொண்டு வருவதற்கான வழிவகைகளை ஆராயும் பொருட்டு நேச நாடுகளின் தலைவர்கள் மணிலாவில் கூடுகின்றனரெனத் தெரிவித்தார்.

# 'பத்திரிகையாளருக்கு மரியாதை காட்டுக'

சைகோன், ஒக். 4

எல்லாப் பத்திரிகையாளர்களையும் மரியாதையுடன் நடத்தும்படி தென் வியட்னும் சிவில், பொலிஸ், இராணுவ அதிகாரிகளைப் பிரதம மந்திரியின் காரியாலயம் கோரியுள்ளது தென். வியட்னும் மற்றும் அமெரிக்கப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தம்மை இம்சைக்குள்ளாக்குவதாக வெளிநாட்டு பத்திரிகை நிருபர்கள் செய்த புகாரைத் தொடர்ந்தே இக்கோரிக்கை இடப்பட்டுள்ளது.

(பி. டி. ஐ)

# செங்காவலர் - ஊழியர் மோதலில் 100 பேர் மரணம்

ஹொங்கொங், அக். 4

அண்மையில் சீனவிலுள்ள மாகாணமொன்றில் அங்குள்ள கம்யூனிஸ்ட் ஊழியர்களுக்கும் செங்காவலர் இயக்கத்தினருக்குமிடையே நடந்த கடும் சண்டையில் 100 பேருக்கு மேல் கொலை செய்யப்பட்டதாகச் சீனவிலிருந்து வந்த பிரயாணிகள் அறிவித்துள்ளனர் எனச் செய்திகள்கிடைத்துள்ளன.

# ஆறு செடிகளிலிருந்து 1007 றுத்தல்

சிசெஸ்டர், (இங்கிலாந்து) ஒக். 4

ஆறு செடிகளிலிருந்து 1007 றுத்தல் உருளைக் கிழங்கைப் பெற்றுள்ள 59 வயதான தொமஸ் ருக் என்பவர் உலகத்திலேயே உருளைக் கிழங்கு உற்பத்தியில் ஒரு சாதனையை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

(பி. டி. ஐ)

# நேப்பாளத்துக்கு இந்திரா

புதுடில்லி, அக்.4

இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேப்பாளத்துக்கு மூன்றுநாள் விஜயம் மேற்கொண்டு இன்றுகாலை புதுடில்லியிலிருந்து விமான மூலம் காட்மாண்டுக்குப் பயணமானர்.

# பஸ் விபத்து வழக்கு

## சாரதி விடுதலை

யாழ்ப்பாணம், புதன்

பண்ணைபாதை பஸ் விபத்து வழக்கில் எதிரியான பஸ் சாரதி விடுதலைசெய்யப்பட்டார். இவ்வழக்குநேற்று காலை யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. என். எம். ஜே. ராஜேந்திரம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. விசாரணைமுடிவில்எதிரி விடுதலை செய்யப்படடார்.

இவ்வழக்கில் 64-ம் ஆண்டு செப்டம்பர் 21ம் தேதி பண்ணை பாதையில் கவலையீனமாக பஸ்ஸை செலுத்தி சீமான் பெண் அன்னம்மாவின் மரணத்தை விளைவித்ததாக, செல் ஐயர் சிவபாதசிருதய ஐயர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் அட்வகேட் ஜே எம். செரிபிப், புறக்டரிவி நடராசா, புறக்டர் எஸ். பாலகுமார் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராளுர்.

# வடவியட்னுமுக்கு ரஷ்ய உதவி

மாஸ்கோ, ஒக். 4

வடவியட்னுமுக்குப் புதிய உதவியளிக்கும் உடன்படிக்கை ஒன்றை ரஷ்யா வடவியட்னுமுடன் செய்துள்ளது. பொருளாதார உடன்படிக்கை என்று தெரிவிக்கப்பட்டாலும் இதில் இராணுவ உதவியும் அடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

# ஜோர்டான் மீது சிரியா குற்றச்சாட்டு

டமாஸ்கஸ், அக் 4

சிரியாவில் அண்மையில் நடைபெற்ற இராணுவச் சதியைத்தூண்டி, அதற்காக பல லட்சக்கணக்கான டாலர்களைச் செலவழித்ததாக சிரியாவின்உள்துறை மந்திரி திரு. முகம்மது எயித் அஷாவி ஜோர்டான் மீதுகுற்றம்சாட்டியுள்ளார்.

(பி. டி. ஐ.)

# வியட்னும் உச்சி மாநாடு

மணிலா, அக். 4

மணிலாவில் 7 நாடுகளின் வியட்னும் உச்சி மாநாடு பெரும்பாலும் அக்டோபர் 28 அல்லது 29ல் ஆரம்பிக்கலாமெனத் தெரிகிறது.

(பி டி ஐ)

# சுகர்னேவுக்கு குழந்தை?

ஹொங்கொங், அக். 4

ஜனதிபதி சுகர்னேவின் ஜப்பானிய மனைவி ரத்னசாரி தேவி கர்ப்பவதியாக இருப்பதாகவும், குழந்தைப் பேற்றுக்கு ஹொங்கொங் வரலாமெனவும் 'ஸ்டார்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

(பி டி ஐ)

போகோட்டா, ஒக். 4

[illegible] பொதுத் [illegible] மாநாடு ஆரம்பமாகியுள்ளது.

# இந்திராகாந்திக்கு பிரிட்டிஷ் தேவாலய நன்கொடை

பிரிஸ்டல் (இங்கிலாந்து), அக். 4

மேற்கு இங்கிலாந்து நகரான பிரிஸ்டலுக்கு அருகிலுள்ள வெஸ்ட்பெரி-ஒன்-டைன் என்னுமிடத்தில் பல்கலைக்கழக மாணவியாய் முன்பு குடியிருந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, உள்ளூர் தேவாலயமொன்று அதன் 1250-வது ஆண்டு நிறைவு விழாவைமுன்னிட்டு அடுத்த வருடம் சேகரிக்கவிருக்கும் நிதிப்பணத்தைப் பெறுவாரெனத் தெரிகிறது.

தேவாலயத்தின் பொறுப்பாளரான வண. கென்னெத் ஹிளாக் கூறியதாவது! ''நாங்கள் எமது தேவாலயச் சரித்திர வருடம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பவுணை சேகரிக்க உத்தேசித்துள்ளோம். திருமதி இந்திராகாந்திக்கு அளிக்கப்படும் பணத்தை அவரது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அவர் எந்த விதத்திலும் பயன்படுத்தலாம்.

கிடைக்கப்பெறும் நிதிப்பணம் இந்தியப் பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் சேர்க்கப்படுமென்று திருமதி இந்திராகாந்தி எழுதியுள்ளதாக வண. கென்னெத்ஹிளாக் மேலும் தெரிவித்தார்.

(பி. டி. ஐ.)

# கர்ப்பிணிகள் கஷ்டம்

திருநெல்வேலி, செவ்வாய்

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் கர்ப்பிணிகளை அனுமதிப்பதில் அண்மையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினுல் பல கர்ப்பிணிகள் கஷ்டமுறுவதாகத் தெரிகிறது.

முன்னரெல்லாம் ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் அனுமதிக்கப்படும் கர்ப்பிணிகள் நேரே கர்ப்பிணிகள் வார்டுகளுக்கே கொண்டு செல்லப்பட்டு அங்கேயே பதியப்பட்டு அனுமதிக்கப்பட்டு வந்ததாகவும், ஆனுல் சில வாரங்களுக்கு முன்னிலிருந்து கர்ப்பிணிகளும் வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்துக்கு வந்து அங்கே பதியப்பட்ட பின்னரே கர்ப்பிணிகள் வார்டுக்கு அனுமதிக்கும் முறை கையாளப்பட்டு வருகின்றதாம். இதனுல் சில நாட்களுக்கு முன்னர் ஒரு பெண் வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்திலேயே குழந்தையைப் பிரசவித்த சம்பவம் ஒன்று நடைபெற்றதாகவும் தெரிகின்றது.

இவ்வித புதிய நடைமுறைகளால் கர்ப்பிணிகள் பெரும் கஷ்டத்துக்குள்ளாக வேண்டியிருப்பதாக அறியப்படுகிறது.

# பிரதமர் வில்சன் பைபிள் வாசித்தார்

## மாணவர் குழப்பம் விளைவித்தனர்

பிரைட்டன், ஒக். 4

இங்குள்ள தேவாலயமொன்றில் பிரிட்டிஷ் பிரதமர் ஹரால்ட் வில்சன் பைபிள் வாசித்துக் கொண்டிருக்கையில், மாணவ ஆர்ப்பாட்டக்காரர் 'வியட்னும் கொலைகாரன்', 'மோசடிக்காரன்' என்று கூச்சலிட்டபடியே தேவாலய சேவையின்இடையில் புகுந்து குழப்பம் விளைவித்தனர். சன நெருக்கமான அத்தேவாலயத்தில் சில பெண் ஆர்ப்பாட்டக்காரர் வழியில் படுத்து விட்டனர். தேவாலயச்சபை அங்கத்தவர் சிலர் அப் பெண்களின் தலைமயிரைப் பிடித்து இழுத்துச் சென்றனர். பத்து நிமிடங்கள் வரை இக்குழப்பம் தொடர்ந்து நடைபெற்றது.

பைபிள் வாசிப்பை இடையில் நிறுத்திவிட்டு அமர்ந்த பிரதமர் வில்சன், குழப்பம் தணிந்த பின்னும் தமது வாசிப்பைத் தொடரவில்லை மாணவ ஆர்ப்பாட்டக் காரரைப் பொலிசார் தேவாலயத்தினின்றும் வெளியே இழுத்துச் சென்றனர். யாராவது கைது செய்யப்பட்டார்களா என்பது இதுவரை தெரியவில்லை

(பி. டி. ஐ)

# சைக்கிள் திருட்டு

உடுப்பிட்டி, திங்கள்

நெல்லியடிச் சந்தியில் சென்ற வெள்ளிக்கிழமை பல சைக்கிள்கள் மாயமாக மறைந்துள்ளதாக அறியப்படுகிறது.

நெல்லியடியில் உள்ள கடையொன்றில் வேலை பார்க்கும் வாலிபர் ஒருவர் தமது சயிக்கிளை வெளியில் வைத்துவிட்டு கடையைப் பூட்டும்போது யாரோ தமது சயிக்கிளைத் திருடிக்கொண்டு போய்விட்டதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்

அன்று மாத்திரம் பல சைக்கிள்கள் காணுமல் போய்விட்டதாகப் பலர் பொலிசாருக்கு புகார்செய்துள்ளனர்.

தார் எஸ் சலாம், அக்4

ஐக்கிய அரபுக்குடியரசுடன் தனது ராஜதந்திரத் தொடர்புகள் யாவையும் துண்டித்துவிட டியூனிசியா தீர்மானித்துள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உலக சமுதாயத்திலே தான் ஓர் அங்கத்தவனென்பதையும் மனிதசமூகமே பல தேசங்கள் அடங்கிய ஒரு பெரிய குடும்பம் என்பதையும் ஒவ்வொருவரும் பரஸ்பர நன்மைக்காக வாழ வேண்டுமென்பதையும் மனிதன் நன்குணர்ந்து அதற்கமைய நடக்கும்போதுதான், அவன் மன நிறைவும், அமைதியும் காணமுடியும்.

— இளே கிளமெட்ஸன்.

ஈழநாடு

EELANADU National Tamil Daily: Post Box 49 JAFFNA.
"Telegrams": EELANADU Jaffna: Telephone 189

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு புரட்டாதி மீ 19 (5 10 66)

# தமிழரின் பீதி நீங்க வழி

ஈழத்திலுள்ள தமிழ் பேசும் மக்களிடையே, தங்கள் சமூகத்தின் எதிர்காலத்தைப் பற்றிய பீதி குறைவதற்குப் பதில் சமீபகாலமாக அதிகரித்து வருகிறது. இது துரதிஷ்டமாகும். இந்தப் பீதியைக் குறைக்க எல்லா நடவடிக்கையும் எடுக்க வேண்டியது தேசிய அரசாங்கத்தின் முதல் கடமை. ஆனால் இதற்கு மாருக, இப்பீதியை அதிகரிக்கக்கூடிய சில நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதனால் தேசிய ஒற்றுமை குலைவதுடன் மீண்டும் சமூக அமைதி பாதிக்கப்படக் கூடிய நிலைமை உருவாகக்கூடும். இந்த ஆபத்தைத் தவிர்க்கவேண்டியது தேசிய அரசாங்கம் உள்ளிட்டு, நாட்டின் நன்மையிலும், ஜனநாயகவளர்ச்சியிலும் அக்கறைகொண்ட எல்லாரது அதிமுக்கியமான பொறுப்புமாகும்.

ஜனநாயகம் வெற்றிகரமாக நடக்கவேண்டுமாயின் சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு அவர்கள் பீதி நீங்கி நிம்மதியாகவாழவும் அவர்களது ஒத்துழைப்புப் பூரணமாகக் கிடைக்கவும்வேண்டும் ஆனால் 1956ம் வருடத்திலே தனிச் சிங்களச் சட்டம் ஒருதலைப்பட்சமாக நிறைவேற்றப்பட்டபின், இந்நாட்டிலே இரண்டாவது முக்கிய சமூகத்தவராக உள்ள தமிழர் இரண்டாம்தரப் பிரஜைகளாகி, ஜனநாயகமெனப்படும் முறையிலேயே நம்பிக்கையிழந்தனர் தங்கள் அடிப்படை உரிமைகளுக்கும், உயிருக்குமே பாதுகாப்பற்றவராகப் பீதியுடன் வாழவேண்டிய நிலையேற்பட்டது. அவர்களது ஒத்துழைப்பும், ஆதரவும் இல்லாததால் இந்நாட்டில் அமைதி குலைந்ததுடன், நாடு முன்னேறமுடியாமலும்போயிற்று. இந்த அனுபவத்தின் பயனாகத் தமிழரின் ஆதரவையும்பெற்ற தேசிய அரசாங்கம் உருவாக இந்நாட்டுப் பொதுமக்கள் தேர்தல் மூலம் நல்ல தீர்ப்பளித்தனர்.

தேசிய அரசாங்கம் நிர்வாகப் பொறுப்பை ஏற்றதும் சிறப்பாகத் தமிழ் மக்களின் பீதி குறைந்து புதிய நம்பிக்கை உதயமாயிற்று தங்கள் மொழி உரிமைகள் பாதுகாக்கப்பட்டு, தாங்களும் சரிநிகர் சமானமாக இந்நாட்டில் மீண்டும் வாழக்கூடிய நிலை ஏற்படுமென்று ஆவலுடன் எதிர்பார்த்தனர். தேசிய அரசாங்கமும் சிறப்பாகப் பிரதமரும் தமிழரின் நியாயமான குறைகளை உணர்ந்து அவற்றை நீக்கப் படிப்படியாகக் காரியங்கள் செய்வதை மறுக்கமுடியாது. ஆனால் அரசாங்கத்திலேயுள்ள சிற்சில நிதானம் அற்றவர்களின் போக்குக் காரணமாக நிலைமை மீண்டும் மோசமடைந்து, தமிழரின் பீதியை அதிகரிக்கக் கூடியதாக இருக்கிறது.

உதாரணமாக இந்நாட்டிலுள்ள தமிழ்க் குழந்தைகள் தங்கள் தாய் மொழிமூலம் கல்வி கற்கும் அடிப்படை உரிமையை அனுபவிக்கமுடியாமல் கொழும்பு, கண்டி முதலிய பகுதிகளில் தவிக்கின்றார்கள். தமிழ்மூலம் கல்வி கற்பிக்கும் பாடசாலைகள் மூடப்படுவதுடன் தமிழ் வகுப்புகளும் பலவீனப் படுத்தப்படுகின்றன. ஆகவே தமிழ்ப்பிள்ளைகள், தங்கள் தாய் மொழி மூலம் கல்வி பயில முடியாமல், வேறு வழியின்றிச் சிங்களம் மூலம் கல்விகற்க மறைமுகமாக நிர்ப்பந்திக்கப் படுகின்றார்கள். இதனால் அவர்களது கல்வி பெரிதும் தடைப் படுவதுடன் அவர்கள் தமிழர்களாக வாழவும் முடியாதபடி செய்யப் படுகின்றார்கள். தமிழ் சமூகமே படிப்படியாக இவ்வித நடவடிக்கைகளால் மறைந்துவிடுமோ என்று அஞ்சக் கூடியதாகவும் உள்ளது.

இந்நாட்டின் இரு முக்கிய தேசிய மொழிகள் சிங்களமும், தமிழும். இரண்டையும் எல்லாரும் கற்கவேண்டியது தான். அதுவே தேசிய ஒற்றுமைக்கு வழிசெய்யும். ஆனால் தமிழருக்கு மட்டும் சிங்களத்தைப் போதிக்க நடவடிக்கை எடுத்து, சிங்களவர் தமிழ் கற்க எவ்வித ஏற்பாடும் செய்யாதிருப்பின் அதன் நோக்கமென்ன? அரசாங்க ஊழியருக்குச் சிங்களம் தமிழ் இவ்விரண்டு மொழிகளுந்தெரிந்திருக்க வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சியினர் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தும் ஏன் அதை அமுலுக்குக் கொண்டுவர இதுவரை எவ்வித நடவடிக்கையையும் தேசிய அரசாங்கம் எடுக்கவில்லை? அதை அமுலுக்குக் கொணர்ந்தால் சிங்களவரும் தமிழ்கற்க ஆவலுடன் முன்வரக்கூடும். தமிழரும் தன்மானத்துடன் பீதியில்லாமல் சிங்களம் கற்க முன்வரமுடியும்.

மேலும், சிங்களம் கற்பதென்பது ஒன்று. தமிழ்க் குழந்தைகளுக்குச் சிங்கள மூலம் கல்வி போதிப்பது என்பது அடியோடு வேறு. ஒவ்வொரு குழந்தையும் தன் தாய்மொழி மூலம் கல்வி கற்கும் அடிப்படை உரிமை பெற்றுள்ளது. இலங்கைத் தீவெங்கும் அந்த உரிமையை எந்தக் குழந்தைக்கும் மறுக்கப் படாது. ஆனால் இதற்கு நேர்மாருகவே காரியங்கள் நடப்பதாக அஞ்சப் படுகிறது. தமிழர்மீது சிங்களத்தைத் திணிக்கவில்லை என்கிருர் அமைச்சர். ஆனல்

# 'தீண்டாமையை ஒழிக்கவே ஒன்றுபட்டு நிற்கிறேம்'

## தமிழர் ஐக்கிய முன்னணிபற்றி விளக்கம்

மாவிட்டபுரம், செவ்.

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி அரசியல் சார்பு இல்லாதது. அது நிரந்தர ஸ்தாபனம் அல்ல தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே நாம் ஒன்றுபட்டு நிற்கிறேம்'' என்று முன்னாள் செனட்டர் ஜி. நல்லையா தெல்லிப்பழையில் நடைபெற்ற சத்தியாக்கிரக இயக்கப் பிரசாரக் கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் திரு, கதிரவேலு தலைமையில் சத்தியாக்கிரக இயக்கத்தின் முதலாவது பிரசாரக் கூட்டம் நடைபெற்றது திரு நல்லையா தொடர்ந்து பேசியதாவது.

இந்நாட்டில் வாழும் சிறுபான்மைத் தமிழ்மக்கள் தமது அடிப்படை மனித உரிமைகளைப் பெற்று வாழ வேண்டும் என்பதற்காகவே அரசியல் கருத்து வேறுபாடுகள் கொண்ட பலரும் சேர்ந்து ஐக்கிய முன்னணி உருவாக்கி இருக்கிறேம். எந்த அரசியல் ஸ்தாபனத்திடமும் எமக்குப் பற்று இல்லை நாமும் மனிதர்களாக வாழவேண்டும் இதுவே நமது கோரிக்கை.

சிறுபான்மைத் தமிழர்களுடைய மனித உரிமைகள் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்று பெரும்பான்மைத் தமிழர்களையும் தமிழ்த் தலைவர்களையும் கேட்டு வருகிறேம். நமது நியாயமான கோரிக்கைகளைச் சிலர் உணர்ந்துகொண்டனர் பலர் உணர்கின்றார்கள்.

நாம் நமது விடுதலைப் போராட்டத்திற்கான கால எல்லையை நீடித்து இருப்பது பெரும்பான்மை மக்களின் ஆதரவுடன்தான் நாம் நியாயமான கோரிக்கைகளைப் பெறவேண்டும் என்பதற்காகவே. பெரும்பான்மை மக்களின் மனமாற்றத்துக்கான நடவடிக்கைகளில் தமிழ்த்தலைவர்கள் ஈடுபட வேண்டும்.

பிரசாரக் கூட்டத்திற்குத் தலைமைவகித்த திரு. வ. கதிரவேலு கூறியதாவது:-

கோவில்கள் பொதுமக்களுக்காகவே நிறுவப்பட்டன தனிப்பட்ட நபர்களின் சொத்தாக இருக்கும் கோவில்களில் வழிபடுவோரைத் தடைசெய்யும் உரிமை அவர்களுக்கில்லை. இந்திய சைவாலயங்களில் சைவசித்தாந்த ஒழுக்கங்கள் கைவிடப்படவில்லை. எனவே அங்கு நடைபெறுவதுபோல சைவாலயங்கள் திறந்துவிடப்பட வேண்டும்.

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி இணைச் செயலாளர்களிலும் ஒருவரும் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவருமான திரு. எம். சி. சுப்பிரமணியம் பேசியதாவது:-

நமது தலைமைப்பதவிக்காகவோ சுயவிளம்பரத்துக்காகவோ ஐக்கிய முன்னணி உருவாக்கப்படவில்லை நமது சந்ததியினர் இந்த நாட்டில் மனித உரிமைகளுடன் வாழ வேண்டுமென்பதற்காகவே ஒன்றுபட்டோம். சந்திர மண்டலத்தை மனிதன் எட்டிப்பிடித்துவிட்டான் ஆனால் நமது நாட்டில் ஒரு பகுதியினர் அடிமைகளாக, உரிமைகள் இழந்து வாழ்வது வெட்கக்கேடானது.

சமயம் தோன்றி வளர்ந்த நாட்டிலே கூட சாதிப்பாகுபாடு இல்லை. சிதம்பரம் திருப்பதி, காசி முதலான பெருந்தலங்கள் சிறுபான்மைத்தமிழருக்கெனத் திறந்துவிடப்பட்டன. ஆனால் இங்கே வரட்டுக் கௌரவத்துக்காகவும், சுய மதிப்புக்காகவும் தீண்டாமையைக் கட்டிக்காக்கிருர்கள்.

எழுத்தாளர் கே. டானியல் பேசியதாவது: பொருளாதார சமத்துவம் ஏற்பட்டால் இப்பிரச்னை தீர்ந்துவிடும் என்று சொல்லும் சிலர் தனது நியாயம் தர்க்கத்துக்கு ஒவ்வாதது என்பதனை உணருகிருர்கள் இல்லை. பொருளாதார சமத்துவம் ஏற்பட்டால் சமூகப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று கருதுபவர்கள் சிங்களவர் தமிழர் பிரச்னையும் பொருளாதார சமத்துவம் ஏற்பட்டால் தீர்ந்துவிடும் என்பதனை மறுக்கிருர்கள் என்பது தெரியவில்லை.

வாழ்க்கையில் பலவற்றை தனி உடமை ஆக்கலாம். ஆனால் கடவுளை யாராலும் தனிஉடமையாக ஆக்க முடியாது. கடவுளை வழிபடும் உரிமை எல்லோருக்கும் உண்டு.

சிறுபான்மைத் தமிழர் மகாசபை நிர்வாகக் காரியதரிசி திரு. செல்லையா பேசுகையில்: சிறுபான்மை தமிழர்களுடைய நியாயமான கோரிக்கைகளை விளக்கி கிராமங்கள் தோறும் பிரசாரக் கூட்டம் நடத்தப்படும் என்றும் அடுத்த பிரசாரக் கூட்டம் சுன்னுகத்தில் வரும் 5-ம் திகதி நடக்கும் என்றும் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் எஸ். கதிரவேலு, என். புலேந்திரம், எஸ். அர்ச்சுனன், என். ஆறுமுகம், எஸ். பங்கிராக உட்பட மற்றும் பலர் பேசினர்.

அதே சமயம் சிங்களம் தெரியாவிட்டால் அரசாங்க உத்தியோகமில்லை என்றும் சட்டம் செய்யப்பட்டுத் தீவிரமாக அமுல் செய்யப்படுகின்றது. சிங்களவருக்கு தமிழ் அறிவு இல்லாவிடினும் அரசாங்க உத்தியோகம் கிடைக்குமென்ற இன்றைய நிலை பட்சபாதகமாகாதா?

இந்த நிலைமாறி, தமிழரின் பீதி நீங்கி, தேசிய ஐக்கியம் பலப்பட ஒரே வழி, ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டபடி அரசாங்க உத்தியோகத்தருக்கு இருதேசியமொழி அறிவும் வேண்டும், என்று உடன் செய்வது தான். அதைச் செய்தால் சிங்களவரும் தமிழரும் இரு தேசிய மொழிகளையும் கற்க ஆவலுடன் முன்வருவதுடன் தேசிய ஒற்றுமையும் ஐக்கியமும் வளர வழிபிறக்கும்.

## அரசாங்கஅதிபரை சந்திக்க முடிவு

மாவிட்டபுரம், செவ்வாய்

அகில இலங்கைச் சைவக் கோயில் தர்மகர்த்தாக்கள் சபையின் நிர்வாகசபை மாவிட்டபுரத்தில் பிரமஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள் தலைமையில்நடைபெற்றது.

சைவக் கோவில்களின் அமைப்பு, நிர்வாகம் சைவ அனுஷ்டானம் முதலியவற்றை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவை பேட்டிகண்டுதெளிவாக விளக்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இக்குழுவின் கூட்டம் அடுத்தவியாழக்கிழமை கீரிமலையில் நடைபெறும்.

## சிங்கள ஆசிரியர் நியமனம்

### தமிழரசு பாராளுமன்ற குழு ஆலோசனை

யாழ்ப்பாணம், புதன்

தமிழரசுக் கட்சிப் பாராளுமன்றக் குழுக்கூட்டம் இம் மாதம் 8-ம் தேதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது. அக்கூட்டத்தில் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப் பட்டதை ஆட்சேபித்து தமது தொகுதி ஆதரவாளர்கள் வெளியிட்ட கருத்தை தெரிவிப்பாரென நம்பப் படுகிறது.

தமிழரசுக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் பேசும் குழந்தைகள் (தமிழ், முஸ்லிம் குழந்தைகள்) ஆரம்பக்கல்வி முதல் பல்கலைக்கழகம்வரை, தமிழ் மொழியில் கல்வி கற்கும் உரிமைக்காகப் போராடுவோம் என்று வெளியிட்டிருந்ததை ஆதரவாளர்கள் கிளிநொச்சி எம். பி. யின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்கள்.

சிங்கள அரசாங்க உத்தியோகத்தர்கள், தமிழ் மொழிகற்காமல் இருக்க, தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களைமட்டும் சிங்களம் படிக்க வற்புறுத்தும் திறைசேரி சுற்றறிக்கைகளிலும், தமிழ்ப்பிரதேசங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்பும் முயற்சிகளிலும் தமிழினம் முழுவதற்கும் பேராபத்து ஏற்பட்டுள்ளதாக ஆதரவாளர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில், கிழக்கு மாகாணத்திலுள்ள (முஸ்லிம்) பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்பட்ட செயலை எதிர்க்குமாறு ஆதரவாளர்கள் பலர் குறிப்பாக வாலிபர்கள் கிளிநொச்சி எம். பி. யிடம் கூறியதாக அறியப்படுகிறது.

## யாழ் நகரில் தமிழில் இல்லை

பலாலி, செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் உள்ள காட்டு இலாகாவில் தமிழில் பத்திரம் இல்லை. இக்கந்தோரில் மரம்எடுப்பதற்கானவிண்ணப்பப்பத்திரம் தமிழில் இல்லை. இப் பத்திரத்தில் சிங்களமும் ஆங்கிலமும் மட்டும்தான் இருக்கிறது. இதனால் பொதுமக்கள் ஆங்கிலம் அல்லது சிங்களம்படித்தவர்களிடம் கொண்டு திரியும் கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

## காலி இடம் நிரப்பப்படவில்லை

சங்கானை, செவ்.

சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையிலிருந்து இரு ஆசிரியர்கள் சென்ற மே மாதம் 1-ம் திகதியிலிருந்து மாகோவிற்கும் ருகலை மகா வித்தியாலயத்திற்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதில் ஒரு இடம் நிரப்பப்பட்டும் மற்ற இடம் இதுவரையும் நிரப்பப்படவில்லை. இதனால் மாணவர்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## புதிய ஜே. பி.

முல்லைத்தீவு, செவ்வாய்

முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பிரசித்த நொத்தாரிசாகவும், திடீர்மரணவிசாரணை அதிகாரியாகவும் கடமையாற்றும் திரு. செ. தம்பையா நீதி அமைச்சரால் சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதனுமடம் விபத்து வழக்கு; எதிரி விடுதலையாளுர்

யாழ்ப்பாணம், புதன்

மருதனுமடம் சந்தி விபத்து வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார் இவ்வழக்கு நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு. என். எம். ஜே ராஜேந்திரம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 1965-ம் ஆண்டு மே மாதம் 3-ம் திகதி மருதனுமடச் சந்தியில் நல்லதம்பி நாகலிங்கம் என்பவர் பெட்ரோல் பவுசரை கவலையீனமாகச் செலுத்தி கந்தையா பொன்னம்பலத்தின் மரணத்தை விளைவித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் அட்வகேட் ஜே. பி. செரிபிம், புறக்டர் வி, நடராசா, புறக்டர் எவ். பாலகுமார் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராளுர். வழக்காளிகள் தரப்பில் அட்வகேட், சி. என். தர்மலிங்கம் ஆஜராளுர்.

தம்பிராசா சாட்சியமளித்தபோது கூறியதாவது: தான் நின்று பார்த்தபோது சயிக்கிளில் ஒரு மனிதர் வந்துகொண்டிருந்தார். என்னைக்கடந்து சையிக்கிள் சென்றது பின்னுல் பெட்ரோல் பவுசர்வந்தது. என்ன வேகத்தில் வந்ததென்று எனக்குத்தெரியாது. பவுசரும் என்னைக்கடந்து சென்றது. பவுசர் சயிக்கிளைத் தட்டியதும் சயிக்கிளில் சென்றவர் கீழேவிழுந்தார். சிறிது தூரம் சென்றபின் பவுசர் நின்றது. பவுசரை எதிரி செலுத்தி வந்தார். சாரதி ஹோன் அடிக்கவில்லை.

## வெள்ள அகதிகளுக்கு 3 லட்சம் ரூபாய்

கொழும்பு, செவ்.

வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட இருபதிளுயிரம் குடும்பங்களுக்கு சமூக சேவை பகுதியினர் அத்தியாவசிய பொருட்களை வழங்கியுள்ளனர்.

மிளகாய். கருவாடு, தேயிலை, சீனி, தேங்காய், ஆகிய உணவுப் பொருட்களை பாதிக்கப்பட்ட மக்கள் பெற்றுள்ளனர்.

இரத்தினபுரி, காலி, மதுரை ஆகிய இடங்களில் அதிகமான குடும்பங்கள் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டுள்ளன. இரத்தினபுரியில் மட்டும் 5,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.

வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இதுவரை 3 லட்சம் ரூபா செலவாகியுள்ளது.

சமூகசேவை அதிகாரி டாக்டர் ஆர். திருச்செல்வம் எல்லா ஒழுங்குகளையும் செய்துவருகிருர்.

## சாரணர் இயக்கம்

நெடுந்தீவு, செவ்வாய்

நெடுந்தீவு மேற்குசைவப் பிரகாச வித்தியாசாலையில் முதல் முதலாக சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான பயிற்சியை சாரணப்பயிற்சி பெற்ற ஆசிரியர் திரு. சு. சிவநாகமூர்த்தி அளித்து வருகிருர், இதை ஆரம்பித்துப் சேசியதலைமையாசிரியர் திரு. ஆர். வேலுப்பிள்ளை சாரணியம், மாணவர்களைச் சிறந்த பிரஜைகளாக்கும் ஒரு நல்லியக்கமென்றும், அவ்வியக்கத்தில் சேர்ந்துள்ள மாணவர்களைத் தான்பாராட்டுவதாகவும் கூறிஞர்.

## பாடசாலைநாடகவிழா இன்றையநிகழ்ச்சிகள்

திருநெல்வேலி, புதன்

இலங்கைக் கலைக்கழகத் தமிழ்நாடகக்குழுவின் ஆதரவில் பரமேஸ்வராக் கல்லூரிமண்டபத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான பாடசாலைகள் நாடகப் போட்டி இன்றுடன் முடிவடையும்.

இன்றிரவு மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் கல்லூரியினரின் ''உத்தமன் பரதன்'', பருத்தித்துறை புலோலி ஆண்கள்பாடசாலையினரின் ''நாவுக்கரசர்'' ஆகிய இரண்டு நாடகங்களும் இடம்பெறும்.

வடமாநில வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டுவெற்றிபெற்ற நாடகங்களுக்குப் பரிசில்களை வழங்குவார்.

## நல்லூர்ப்பகுதி மக்களின் அச்சம்

நல்லூர், செவ்வாய்

நல்லூர் பகுதியில் இருக்கும் பிராமணன் வட்டு குளம் மழை காரணமாக நீர்த்தேக்கம் ஏற்பட்டு நிரம்பியுள்ளது. தொடர்ந்து மழை பெய்யுமாளுல் இக்குளத்துக்கு அருகாமையில் சிறு குடிசைகளில் வாழுகின்றவர்கள்வீடிழந்து தவிக்க வேண்டிய நிலை ஏற்படலாமெனக் கருதப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் சுற்றுப்புறங்களில் இருந்து வடிகால்கள் மூலம் நீர் இக்குளத்தில் தேக்கப்படுகின்றமையால் இதனுல் பல அழிவுகள் ஏற்படலாம் என்று அஞ்சப்படுகின்றது.

நல்லூர்ப்பகுதியில் சமீபத்தில் பெய்த மழையால் சிலர் வீடிழந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## புதியமுறை

இமையாணன், செவ்.

வல்வெட்டித்துறை 'இந்திராணி' அரசினர் வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிடும் நேரம், மற்றும் அரசினர் ஆஸ்பத்திரிகளைப்போல் இப்பொழுது குறிப்பிட்ட நேரக்கட்டுப்பாட்டின் கீழ் அமுலுக்கு வந்துள்ளது. இதுவரை காலமாக, இந்த ஆஸ்பத்திரியில் உள்ள நோயாளர்களை வைத்தியர்கள் சோதித்து மருந்து கொடுக்கும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் எந்த நேரத்திலும் சென்று பார்வையிடலாம்.

## கோர்ட்டில் மரணம்

முல்லைத்தீவு, செவ்வாய்

முல்லைத்தீவு கிராமக் கோட்டு நீதிமன்றத்தில் தற்காலிகமாக முகாமமைத்திருக்கும் தந்திப்போக்குவரத்துத்துப் பகுதியைச் சேர்ந்த பி. சுப்பிரமணியம் என்னும் கங்காணி கிராமக் கோட்டு மேசையில் இன்று காலை இறந்துகிடக்கக் காணப்பட்டார். இதுபற்றி முல்லைத்தீவுப் பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்

## டெலிபிறிண்டர்; தொலைபேசி வசதி

உடுப்பிட்டி, செவ்.

கரவெட்டி தபாற்கந்தோருக்கு ஒரு 'டெலிபிறிண்டர்' இயந்திரமும், வதிரி உப தபாற்கந்தோருக்குத் தொலைபேசித்தொடர்பும் இடைக்கவிருக்கின்றன. இத் தகவலை இங்கு விஜயம்செய்த தபால் மா அதிகாரி திரு. ஏ. எவ். பெரேரா உடுப்பிட்டி எம்.பி. திரு. மு. சிவசிதம்பரத்திடம் தெரிவித்துள்ளார்.

ஆசிரியருக்குக் கடிதம்

## கண்ணைவிற்று சித்திரம் வாங்கவா?

கல்விமந்திரி சிங்களஆசிரியர்களை வட, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்புவதினுல் தமிழ்மக்கள் நன்மை அடையக்கூடும், ஆனுல் இதனுல் எமது தாய்மொழிக்கும் பேராபத்து வரக்கூடும். சிங்கள மொழி படித்தால்தான் தாங்கள் வேலை பெற்றுக்கொள்ளலாமென்ற நம்பிக்கை எம்மவருள் நிலவிவருகிறது, இதுஓரளவு உண்மையாக இருக்கலாம். ஆனுல் எமது சுயநலத்திற்காக எமது மொழியை அழிப்பது கண்ணை விற்றுச் சித்திரம் வாங்குவது போலஇருக்கின்றது. ஒருவன் கண்ணைவிற்றுச் சித்திரம்வாங்கினுல் மற்றவர்கள் கை கொட்டிச் சிரிப்பார்கள். அதைப்போல மற்றைய நாட்டினரும் நம்மைப்பார்த்து நகைப்பார்கள் ஆகவே இதுவிஷயத்தில் தமிழ்த் தலைவர்களும், தமிழராகிய நாமும் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும்.

வ. தயாகரன்

சாவகச்சேரி

* * *

## பௌத்தமல்லாத சமய மாணவர்களின் நிலை என்ன?

இதுவரை காலமும் பல்கலைக்கழகப்புகுமுகப் பரீட்சையில் இந்து சமயம், இஸ்லாமிய சமயம், கிறிஸ்தவ சமயம், கத்தோலிக்க சமயம் ஆகிய நான்கு சிறுபான்மைச் சமயபாடங்களும் பரீட்சைப் பாடங்களாகப் பரீட்சிக்கப் படவில்லை. 1967-ம்ஆண்டு க. பொ. த. (உயர்தரம்) பரீட்சைக்கு மேற்படிநான்கு சமயப்பாடங்களும் பரீட்சைப்பாடங்களாக்கப்பட்டு விட்டன. ஆனுல் இந்நான்கு சமய பாடங்களையுமே பல்கலைக்கழகம் பாடங்களாகக் கணித்து எற்றுக்கொள்ள மாட்டாது. எனவே இப்பாடங்களில் மாணவர்கள் சித்தி எய்தினுலும் ஒன்றுதான் சித்திஎய்தா விடினும் ஒன்றுதான். என்னே கொடுமை! இதனுல் பௌத்தசமயத்தவர்கள் அல்லாத மாணவர்கள் தத்தமது சமயங்களை மேற்கொண்டு படிக்கவே இயலாது. பௌத்தசமயம் மட்டுமேமூன்று பல்கலைக்கழகங்களிலும் ஒருபாடமாக ஏற்றுக்கொள்ளப் படுகிறது. ''சமயஅறிவு அல்லாதகல்வி வேரற்ற மரம்போலமடிந்துவிடும்'' என்பது இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பல்கலைக் கழகத்தவர்களும் அறியாததொன்றல்ல.

(சி. சுதந்திரராஜா, தாவடி

## 'சிறந்த தொண்டர்'

பலாலி, செவ்வாய்

காலஞ்சென்ற திரு க. பொன்னம்பலத்தின் நினைவு விழா மயிலிட்டி தெற்கு ஞான வைரவர் ஆலயத்தில் பண்டிதர் திரு. இ. நமசிவாயம் தலைமையில் நடைபெற்றது.

'திரு. பொன்னம்பலம் ஒரு சிறந்த தொண்டராகவும் பணியாளராகவும் இருந்து தொண்டாற்றிஞர்' என திரு. சி. கனகரத்தினம் பேசுகையில்குறிப்பிட்டார்.

## சுற்றுலா

கோண்டாவில், செவ்வாய்

யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலை மாணவர்கள் அகில இலங்கைச்சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் பயிற்சி சம்பந்தமாக பெரிய கூட்டுறவுச் சங்கங்களையும் பார்வையிடுவர்.

## அளவெட்டி வடக்கு நெசவுநிலையம்

அளவெட்டி, செவ்.

அளவெட்டி கிராமமுன்னேற்றச்சங்கம் அளவெட்டி வடக்கில் புதிதாகக் கட்டியுள்ள நெசவுநிலையம் விரைவில் செயல்படத்தொடங்கும். காங்கேசன்துறை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம் நிலையத்தை திறந்துவைப்பாரெனவும் மாகாண அதிபர் திரு. வேணன் அபயசேகராவும் அழைக்கப்படுவாரென்றும்தெரிகிறது. நெசவுநிலையத்தில் பயிற்சி பெறுவதற்ாக 15 வயதுக்கு மேற்பட்ட அளவெட்டி வாசிகளான பெண்களிடமிருந்து கிராமமுன்னேற்றச்சங்கம் விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

## இடமாற்றம்

உடுப்பிட்டி, செவ்வாய்

கரவெட்டி கிழக்கு யார்க்கருவிநாயகர் வித்தியாலயத்தில் கடந்த பல வருடங்களாகத் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. மு. வேலாயுதம் இம்மாதம் முதல் அல்வாய் அ. த. க. பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அல்வாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் சென்ற 9 மாத காலமாகத் தலைமை ஆசிரியராக இருக்கும் திரு. வ. செல்லையா கரவெட்டி யார்க்கரு வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

## 'சிறுவர்களை வருங்கால செல்வங்கள்'

வவுனியா, செவ்.

''நமது வருங்காலச் செல்வங்கள் செல்வச்சிறப்புடன் சிரான வாழ்வு வாழ்வதற்கு நாம் இலங்கையில் 'சிறுவர் வாரத்தை' கொண்டாட வேண்டும். அவர்கள் தான் நமது வருங்காலச் செல்வங்கள். நமது சிறுவர்கள் இன்று தொடக்கம் குற்றம், போன்ற செயல்களில் ஈடுபடாமல் இருக்க சிறுவர்வாரம்வழிவகுக்கும். பிள்ளைகளின் வாழ்வில் நற்குணம், நற்பண்பு, சமுதாயச்சீர்திருத்தம் சிறுவயது தொடக்கம் பழக்கத்தில் கொண்டுவருவது பெற்ருேர் பாதுகாவலர் ஆகியோரின் முக்கிய கடமையாகும். ஆகையால் பிள்ளைகளை நாம் இன்றுதொடக்கம் சிறிய முறையில் வளர்க்கத் தொண்டிக்கவேண்டும். குழந்தைகள் மனதில் சிறியவயதில் சில பெற்ருேர்கள் பயப்படக்கூடிய விடயங்களைச் செய்துவிடுவதால் பிள்ளைகள் சிறுவயது தொடக்கம் பயந்துதான் வாழ்கின்ருர்கள். எவ்விதத்திலும் பிள்ளைகளுக்கு மனவேதனை அடையக்கூடிய விதத்தில் எதையும் செய்யக்கூடாது, அவர்களின் மனம் பிஞ்சு மனம். ஆகையால் அவர்களின் இதயம் ஒன்றையும் தாங்கச் சக்தியில்லாதது. அவர்களின் மனம் எப்பொழுதும் பரிபூரணமாக இருக்கவேண்டும்.''

இவ்வாறு இன்று வவுனியாவில் நடைபெற்ற சிறுவர் வார விழாவில் வவுனியா, மன்ஞர் மாவட்ட சீர்திருத்த உத்தியோகத்தர் திரு. ஏ. எம். ஜூயின் பேசும்போது கூறிஞர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

இன்று சிறு பிள்ளைகளை நாம் அன்பான வார்த்தைகளைக் நல்ல நிலைக்குக் கொண்டுவர முடியும்.

## யார் சுட்டது?

சைகோன், அக்.4

தென்வியட்னுமில் அமெரிக்கா அல்லது நேசநாட்டுத் துருப்புக்களால் சுடப்பட்டு ஒரு அமெரிக்க இராணுவ வீரர் கொல்லப்பட்டார். மூவர் காயமடைந்தனர்.

(பி. டி. வி.)

## உள்ளூராட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இதுவரை கணக்காளர்களாக வெளியிலிருந்தே நியமிக்கப்பட்டனர். உள்ளூராட்சிச்சேவையில் பத்து வருடப் பயிற்சிபெற்றவர்களே குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பிக்க யோக்கியாம்சமுடையவராக விருந்தனர். மேற்படி சங்கம் உள்ளூராட்சி மன்ற அதிகார சபையுடனும் அமைச்சருடனும் இதுபற்றி நடவடிக்கை எடுத்திருந்தது.

## அரசாங்க அதிபர் பொறுப்பேற்ருர்

வவுனியா, செவ்வாய்

வவுனியாவுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட அரசாங்க அதிபர் திரு, எம். இ. பெரேரா, இன்று உத்தியோகபூர்வமாக தமது கடமையை ஆரம்பித்துள்ளார்;

புதிய அரசாங்க அதிபருக்கு முன்னைய அரசாங்க அதிபர், இலாகாத் தலைவர்களையும் ஏனைய உத்தியோகத்தர்களையும் அறிமுகம் செய்துவைத்தார்.

## பாராட்டு விழா

வவுனியா, செவ்வாய்

வவுனியா தமிழ் மகாவித்தியாலய மண்டபத்தில் ஆசிரியர் திரு. கே. சுந்தரலிங்கத்திற்கோர் சேவைநலம் பாராட்டுவிழா வித்தியாலய அதிபர் திரு. ஆர். இராசநாயகம் தலைமையில் நடைபெற்றது.

திரு. சுந்தரலிங்கம் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## வருடாந்த மகாநாடு

வவுனியா, செவ்

வடமாகாண உணவு உற்பத்தி மேற்பார்வையாளர்களின் விசேட காரியகமிட்டிக்கூட்டம் வவுனியா தாண்டிக்குளம் பிரமண்டல வித்தியாலயத்தில் கூடிய பொழுது வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 20-ந் திகதி வவுனியாவில் நடாத்துவதெனவும் அம் மகாநாட்டுக்கு விவசாயதலைமைப் பீடத்தில் இருந்து பல உயர்தர அதிகாரிகளையும் அழைப்பதெனவும், முடிவு செய்யப்பட்டது.

## அரசாங்க அதிபர் பொறுப் பேற்ருர்

வவுனியா, செவ்

வவுனியாவிற்கு புதிதாக நியமிக்கப்பட்ட அரசாங்க அதிபர் திரு, எம். இ. பெரேரா இன்று உத்தியோக பூர்வமாக தமது கடமையை அரம்பித்துள்ளார்,

புதிய அரசாங்க அதிபருக்கு முன்னைய அரசாங்க அதிபர் இலாக தலைவர்களையும், ஏனைய உத்தியோகத்தர்களையும் அறிமுகம்செய்து வைத்தார்,

ஆகையால் பிள்ளைகளை நாம் நல்ல மாதிரிப் பேணி வளர்க்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் வாழும்

— விஜயா விந்தன் —

தமிழாலே நானுற்ற இன்ப மெல்லாந்
தாயுந்தன் அருளாலே கிடைத்த தன்றோ
அமிழ்துக்கு மமிழ்தான அன்பின் மேன்மை
அகிலத்தில் நிலையாக்கும் தெய்வம் நீயோ?

உலகத்தில் நானெடுக்கும் பிறவி யெல்லாம்
உன்புகழைப் பாடுகின்ற பேறு வேண்டும்
அழிவில்லா உன்னன்பைப் பெறுதல் வேண்டி
அளவில்லாப் பிறவிகள் எடுக்க வேண்டும்.

அன்பென்னும் அமிழ்தத்தில் அன்னஞ் செய்தே
அடியேனுக் களித்தின்பங் காணுந் தாயே
மண்ணுக்குள் என்னுடலம் மறையும் போதும்
மாதாஉன் எண்ணமென் நெஞ்சில் வாழும்.

# குழந்தை உலகம்

## இயற்கைப் பண்பு

— 2 —

குழந்தைகளை வளர்ப்பதில் உள்ள தொல்லைகள்:- நாள்தோறும் குழந்தைக்குத் தகுந்த உணவு தயாரித்தல், அதன் துணிமணிகளைத் துவைத்தல், அது உணவருந்திய இடத்தையும் பாத்திரங்களையும் சுத்தம் செய்தல், பெரிய குழந்தைகளிடையே ஏற்படும் சண்டை சச்சரவுகளைத் தீர்த்துவைத்தல், அவர்களது அர்த்தமற்ற கதைகளிலும், விளையாட்டுக்களிலும் பங்கு கொள்ளுதல், அவர்களுக்கு விருப்பமான கண்காட்சி, மிருகக்காட்சிச்சாலை போன்றவற்றுக்கு அழைத்துச் செல்லுதல், வீட்டில்தேவையான பாடங்களைக் கற்றுக்கொடுத்தல் போன்ற அநேக விதமான கடின வேலைகளைக்கொண்டது குழந்தைப் பராமரிப்பு. குடும்ப வருமானத்தில் பெரும்பங்கைக் குழந்தைகளின் தேவைகளுக்கென்று ஒதுக்கப்பட வேண்டி நேரலாம். மேலும் கைக்குழந்தைக்காரர்கள், வெளியூர்ப்பயணங்கள், விருந்துகள், கேளிக்கைகள், விளையாட்டுக்கள், கூட்டங்கள் முதலியவைகளில் பங்கெடுத்துக் கொள்ளமுடியாமற் போகக் கூடும். ஆகையால் மிகவும் விரும்பிக் குழந்தையைப் பெற்றெடுத்த பெற்றோர்கள் கூட, குழந்தைகளினால் தங்கள் தன்னிச்சையான வாழ்வை சிறிது இழக்க நேரிடுகிறது என்பதில் ஐயமில்லை. குழந்தைகளுக்காக தாமயாவற்றையும் தியாகம் செய்ய வேண்டும் மென்பதற்காகப் பெற்றோர்கள் குழந்தைகளைப் பெறுவதில்லை என்பது உண்மையே. ஆனால் தங்களுக்கென்றே சொந்தமான குழந்தைகளைப் பெற்று அவர்கள்மீது அன்பு செலுத்த பெற்றோர் விரும்புகின்றனர், ஏனெனில் குழந்தைகளாய் இருந்தபோது தங்களைத்தங்கள் பெற்றோர் எவ்வண்ணம் நேசித்தனர் என்பதை அவர்கள் மறக்கவில்லை. எனவே, குழந்தைவளர்ப்பு எவ்வளவு கடினமாக இருந்தபோதிலும் குழந்தைகளைப் பெறுவதிலும் அவர்களிடம் அன்பு காட்டுவதிலும், அவர்களை நல்லமுறையில் வளர்த்துச் சான்றோர்களாகத் திகழ்வதைக் காண்பதிலுமே பெற்றோர்கள் தங்கள் வாழ்க்கையில் அதிகத் திருப்தியும், மகிழ்ச்சியும் கொள்ளுகிறார்கள். இதுதான் இயற்கைப்பண்பு, இது அழிவற்ற தன்மையிது, ஏனைய உலகசாதனைகள் எவையும் பெற்றோர்களுக்கு இந்த அளவுக்குப் பெருமையையும் பெருமிதத்தையும் அளிக்கக்கூடியவை அல்ல.

—டாக்டர்
பெஞ்சமின் ஸ்போக்

அழகு செய்வீர்

# கண் மை

கயல்விழி, வேல்விழி என வர்ணிக்கப்படும் அழகுக் கண்களுக்குக் கண்மை மேலும் அழகையூட்டுகிறது

சிலர் கண்மை தயாரிக்கும்போது கண்மைக்கு கறுப்பு நிறம் கொடுப்பதற்கு லாம்பிளாக் அல்லது கறுப்புச் சாயப் பொடிகளை உபயோகிக்கிறார்கள். இவை கண்களுக்கு எரிச்சலையும் கேட்டையும் விளைவிக்கும்.

ஆமணக்கெண்ணெய், சுத்தமான பசுவின் வெண்ணெய் போன்றவைகள் கண்களுக்கு குளிர்ச்சியூட்டி கண்களிலுள்ள இரத்தக் குழாய்களை பலப்படுத்த உதவுகின்றன.

விளக்கெண்ணெயை ஊற்றிக் குத்துவிளக்கை இலேசாக எரியவிடவும். உருண்டை வடிவமுள்ள பாத்திரத்தில் (செம்பு அல்லது கண்ணாடிப் பாத்திரங்கள் போன்றவை) உட்பாத்திரத்தில் வெண்ணெயை இலேசாகத் தடவி விளக்கிலிருந்து வரும் புகையை அதில் படியும்படி பாத்திரத்தை விளக்கின் மீது பிடித்துக்கொண்டால் சிறிது நேரத்தில் வெண்ணெயில் கரி படியும். போதுமான அளவு கரிபடிந்ததும் வெண்ணெயை வழித்து எடுத்துக் கொள்ளவும்.

இவ்வாறு பலமுறை சேகரித்துக்கொண்டு பலமுறை பிசைந்தால் கறுப்புநிறப் பசை கிடைக்கும். இத்துடன் வாசனையூட்டுவதற்கு சுத்தமான சந்தன எண்ணெய் அல்லது புனுகு போன்ற வாசனைத் திரவியங்களைச் சிறிதளவு சேர்த்துப் பிசைந்து கொள்ளலாம். பின் கண்மையைச் சிறிய டப்பாக்களில் அடைத்து வைத்துக்கொள்ளவும்.

### நீடிய ஆயுள்

திருமணமானவர்கள் மணம் செய்யாதவர்களைவிட நீண்ட நாட்களுக்கு வாழ்கிறார்கள் என அவுஸ்திரேலியாவில் நடத்தப்பட்ட மதிப்பீடொன்றின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒழுக்கக்கட்டுப்பாடுகளை திருமணமானவர்கள் பேணிநடப்பதாலேயே இவ்விதம் நீண்ட நாட்களுக்கு வாழ்வதாகக் கருதப்படுகிறது.

# என்ன உலகம்

அவசர அவசரமாகக் குளித்துவிட்டு ஓடிவந்த மனோன், தன்னை அலங்கரிப்பதில் மும்முரமாக முனைந்தாள். எந்தச் சேலையை உடுப்பது என்பதுதான் அவளது இப்போதைய கேள்வி. பல சேலைகளை வைத்திருக்கும் பணக்காரியல்ல அவள். திறமானது என்று சொன்னால் இரண்டே இரண்டுதான்; அதில்தான் இப்போ தேர்வு நடத்த வேண்டும். ரோஸ் நிறசேலை அவளது மாநிறமேனிக்கு எடுப்பாயிருக்கும் என்றாலும் பச்சைதான் அவளது அதிர்ஷ்டக் கலர். இதில் எதை அவள் உடுத்துவது? கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தாள். தன் தம்பியிடம் விரல் சாஸ்திரம்கேட்பதுதான். அதன்படி அதிர்ஷ்ட நிறத்தையே உடுத்தாள்.

மாப்பிள்ளை கொழும்பில் ஏதோ உத்தியோகமாம்; அதனால் கொஞ்சம் பகட்டாக நிற்க வேண்டும். அப்போதுதான் கொழும்புப் பிள்ளைகளுக்குப் பிடிக்கும் என்று கூறி பக்கத்து வீட்டு பார்வதி மாமி கொண்டு வந்த அவளின் மகளிதுதங்க வளையலும், தங்கச் சங்கிலியும் மனோவிடம் அடைக்கலம் புகுந்தன. அப்பாவின் அழைப்பிற்காக ஏங்கிநின்ற மனோன் தன்னை ஒருமுறை கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள்.

எல்லாம் நடந்தது! போய்க் கடிதம் எழுதுகிறோம் என்ற மாப்பிள்ளை வீட்டாரது கடிதமும் வந்தது. பாவம் மனோன்! அவளது அதிர்ஷ்டசேலை காலைவாரிவிட்டது. பார்வதி மாமியின் நகைகளும் பயன்படவில்லை. "கொழும்பில் நாலு பேர் மத்தியில் உலவும் தனக்கு இவ்வித பட்டிக்காடா?" என்றவகையில் வந்தகடிதம் அவளைச் சிலையாக்கியது.

நாட்கள் பல ஓடின. மனோன் உழைத்து பொருள் சேர்த்தாள். இப்போ அவள் பார்க்க பகட்டாயிருந்தாள். மீண்டும் ஒரு நாள்; அதே திருநாள்.

தான் உழைத்து வாங்கிய நகை, உடை அலங்காரப் பொருட்களில் தன்னைமறைத்து அழகுராணியென அலங்கார பூஜிதையாக வந்துநின்றாள் மனோன். இவரும் கொழும்பு மாப்பிள்ளையாம்.

அதே கதைதான்! போய்ப் பதில் எழுதுகிறோம் என்றவர்களின் கடிதம் வந்தது. முதலில் அதிர்ச்சியேயடைந்தாள் மனோன். ஆனால் அடுத்த விநாடியே சிரிப்பொலியொன்று பயங்கரமாகக் கிளம்பியது அவளிடமிருந்து. இரண்டாவது கடிதத்தின் சாரம் இதுதான். "கொழும்பு மாநகரிலே இவ்வளவு செலாவணிகளுக்கிடையே மனோன் போன்ற பகட்டுக்காரியுடன் எவ்விதம் வாழ்வது!" என்பதே.

இத்துடன் முடிந்ததா கதை? அதோ தரகர் வருகிறார் அவள் குறிப்பைக் கொண்டு போக. அவள் தடுக்கவுமில்லை; மறிக்கவும் இல்லை. அவள் சிரிக்கிறாள்; ஏன்?

மனோன் என்ற தன் ஒருத்தியையே இருகோணமாக்கி ஒதுங்கிய ஆணுலகைப் பார்த்தா? இல்லை, இன்னும் மாப்பிள்ளை தேடி அலைகிறாரே அப்பா; அவரைப்

(7-ம் பக்கம் பார்க்க)

# மங்கையர் மன்றம்




இதுவே


"சவரின்"

தரும் மாற்றம்

சமையல் அறைப் பாத்திரங்கள் கழுவுதல் உட்பட வீட்டில் எல்லாவித க[illegible] கரிப்பு வேலைகளுக்கும் சவரின் பார் சோப் வெகு சுத்தமானது; பாதுகாப்பானது. சவரின் பார் சோப்பின் பிரத்தியேக திண்மைத் தன்மையானது தேய்வைத் தடுப்பதுடன் நீண்டகால உபயோகத்திற்கும் வழிகோலுகிறது.

கேட்டு வாங்குங்கள்

சவரின் பார் சோப்




பி சி ஸி

தர மிகு BCC தயாரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாத்கார முயற்சி வழக்கில் கிராமசேவையாளர் விடுதலை

சாவகச்சேரி, செவ்.

"நான் குளித்துவிட்டுப் போகும்போது கிராம சேவையாளராகிய எதிரியைக் கண்டேன். அவர் என்னைக் கத்தி தரும்படி கேட்டார். நான் வீட்டினுள் சென்று எடுத்துவந்து கொடுத்தேன். அப்போது அவர் எனது வலக்கையைப் பிடித்து என்னைக் கடை விருந்தைக்குக் கொண்டு போனார். நான் அம்மா என்று கத்தினேன்."

பலாத்கார முயற்சி வழக்கொன்றில் சாட்சியமளித்த 18 வயதான சரஸ்வதி என்னும் இளம்பெண் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கில் இவ்வருடம் மே மாதம் 27ந் தேதி முகாவில் கிராமசேவையாளர் வி. பரந்தாமன் என்பவர் சரஸ்வதி என்னும் பெண் மீது பலாத்காரம் பிரயோகிக்க முயன்றதாகப் பளைப் பொலிஸாரால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் அட்வக்கேட் திரு. வி. என் நவரத்தினம் புரக்டர் வி. செல்லத்தம்பியின் உதவியுடன் ஆஜரானார். வழக்காளி தரப்பில் அட்வக்கேட் எஸ். ஜெயசிங்கம் புரக்டர் ஆர். டி. சிவகுருவின் அனுசரணையுடனும், பொலிஸாரின் உதவியுடனும் வழக்கை நடத்தினார்.

செல்வரத்தினம் பெண் சரஸ்வதி மேலும் கூறியதாவது: "நான் அவ்வூருக்குப் புதியவள். அயலவரைத் தெரியாது. நான் நான் கத்தியதும் அவர் ஓடிவிட்டார். பின்னர் நான் பொலிஸில் முறைப்பாடு செய்தேன். காரியாதிகாரியிடமும் சொன்னேன். எதிரி என்னைப் பிடித்தபோது வேறு யாராவது கண்டனரோ என்று தெரியாது." சின்னையா என்பவரும் சாட்சியமளித்தார்.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியைச் சுற்றவாளியாகக் கண்டு விடுதலைசெய்தார்

## இரும்புக்கம்பியால் தாக்கினராம்

யாழ்ப்பாணம், புதன்

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சுப்பையா செல்லையா என்பவரை இரும்புக்கம்பியால் தாக்கியதாக நாகலிங்கம், துரையப்பா மற்றொருவர் மீது குற்றம்சாட்டித்தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரிகள் சார்பில் புறக்டர் ஆர். விஸ்வநாதன் ஆஜரானார், வழக்காளிசார்பில் புறக்டர் ஏ. அன்ரனி ஆஜரானார். மாஜிஸ்திரேட் விசாரணையை நவம்பர் மாதம் 29-ம் தேதிவரை ஒத்திவைத்தார்.

## அன்னதான சபை ஆண்டுவிழா

காரைநகர், புதன்

காரைநகர் சிவன்கோவில் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை 9-வது ஆண்டு நிறைவுவிழா நாளை வியாழக்கிழமை மாலை மடாலய மாணிக்கவாசகர் மண்டபத்தில் நடைபெறஇருக்கிறது. மேற்படிவிழாவிற்கு சபைத் தலைவர் திரு. சி. இ. செல்லத்துரை தலைமைதாங்குவார் 'மங்கையர்க்கரசியார்' எனும் பொருள்பற்றி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததம்பிரான்சுவாமிகள் சங்கீதகதாப்பிரசங்கம் செய்வார்

---

## என்ன உலகம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்தா? தன் சிரிப்பைக் கண்டு, அதன் காரணம் காணமுடியாது அதற்கு ஒரு பெயர் சூட்டி தன்னை தனியறையில் தள்ளி அழுகிறாளே அம்மா, அவளைப் பார்த்தா?

மனோன் சிரிக்கிறான்! அவன் ஏன் சிரிக்கிறான் என்பது அவளுக்கே தெரியுமா?

## சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் 'கிறீன்பீட்' விளையாட்டுக்கழகத்துக்குமிடையில் நடைபெற்ற சிநேகிதபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 'பி' பிரிவில் சென். ஜோன்ஸ் வெற்றிபெற்றது. 'ஏ' பிரிவுப்போட்டி சரிசமமாக முடிவுற்றது.

முதலில் நடைபெற்ற 'பி' பிரிவுப்போட்டி பார்வைக்கு ஒரு பக்கப்போட்டியாகவே காணப்பட்டது. காரணம் பந்து எந்நேரமும் 'கிறீன்பீட்' கோல்வாயிலை நோக்கியே முன்னேறிக்கொண்டிருந்தது. இடைவேளைக்கு முன் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு 'பெனல்டி' அடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்த போதிலும் அவர்கள் அதை தக்க முறையில் பயன்படுத்தாது விட்டுவிட்டனர். ஆட்ட முடிவில் சென். ஜோன்ஸ் கல்லூரி 6—0 கோல்களால் 'கிறீன்பீட்' கோஷ்டியைத் தோற்கடித்தது.

அதன்பின் நடைபெற்ற 'ஏ' பிரிவுப்போட்டி ஆரம்பத்திலிருந்து முடியும்வரை ரசிப்பாகவே காணப்பட்டது. இருகோஷ்டிகளும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் விளையாடியது ரசிகர்களுக்கு ஒரு நல்விருந்தாகவே காணப்பட்டது. இடைவேளையின் போது 'கிறீன்பீட்' ஒரு கோலைப்பெற்றிருந்தது. சென். ஜோன்ஸ் கோல்கள் எதுவும்போடவில்லை.

இடைவேளையின் பின் சென். ஜோன்ஸ் மிகவேகமாக விளையாட ஆரம்பித்ததின் காரணமாக அவர்களது முன்னணி வீரரால் ஒரு கோல்போடப்பட்டது. அதன்பின் 'கிறீன்பீட்' முன்னணி வீரர்களால் கோல்போட எடுத்துக்கொள்ளப்பட்ட பல சந்தர்ப்பங்களை, சென் ஜோன்ஸ் பின்னணி வீரர்கள் மிக சாதுரியமாக முறியடித்துவிட்டனர். இரு கோஷ்டிகளும் தலா ஒவ்வொரு கோல் பெற்றமையால் ஆட்டம்சரிசமமாகமுடிவுற்றது. இப்போட்டி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.


# அசலான பானம் அருந்துங்கள் யானை மார்க் பானம் அருந்துங்கள்




உபசார வைபவங்களில் உங்கள்கௌரவ விருந்தாளிகளை உபசரிக்க, வழக்கமாக வழங்கும் பானம், யானை மார்க் ஒறேஞ் பார்லி, அல்லது லங்கா லைம் என்று ஒரு மரபு ஏற்பட்டு விட்டது. ஏன் அப்படி...? ஏனெனில் 70 வருடங்களுக்கும் மேலாக எலிபன்ட் ஹவுஸ், தன்பானங்களின் தரத்தையும் தூய்மையையும் மேம்படுத்தப் பெருமுயற்சி எடுத்து, யானை மார்க்கை, இன்று, குளிர் பானங்களிலேயே அதி நம்பிக்கை வாய்ந்த நாமமாக்கி விட்டது. உங்கள் விருந்தாளிகள், தாம் நன்கு உபசரிக்கப்பட்டதாகத் திருப்தி கொள்ள வேண்டுமானால், அவர்களுக்கு யானை மார்க் பானங்களை வழங்குங்கள்.

கடற்கரையிலோ உல்லாசத் தலங்களிலோ ஒரு நாளை ஆனந்தமாகக் கழிக்க விரும்பினால் தாகந் தீர்க்கும் குளுமையான யானை மார்க் குளிர்பானங்களைத் தவறாமல் எடுத்துச் செல்லுங்கள். மணலில் விளையாடி அல்லது கடலில் நீராடி முடிந்ததும், யானை மார்க் பானங்கள் தெம்பூட்டுகின்றன. உள்ளை முனைப்பெடுக்கச் செய்யவும் உண்டபின் உணவு டச் செல்ல வைக்கவும் யானை மார்க் பானங்கள் உகந்தவை. பாடி ஆடிக்களைத்த பின், தொண்டைக்கு இதமூட்டிச் சோர்வை நீக்கச் சிறந்தவை யானை மார்க் பானங்கள். உங்கள் உல்லாசப் பயணங்களை, யானை மார்க் பானங்களின் துணையுடன் ஆனந்த மயமாக்குங்கள்.

CCS

சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்
கொழும்பு . கண்டி . திருமலை

GRANTS 11


## மன்னார்கசுகொட்டை விவசாய திட்டம்

கொழும்பு, செவ்.

மன்னார் கொண்டாச்சி பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆயிரம் ஏக்கர் கசுக்கொட்டை விவசாயத் திட்டம் முன்னேறி வருவதாக அரசாங்கப் பயிர்ச்செய்கை கூட்டுத் ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

ஆயிரம் ஏக்கரில் ஏற்கனவே 200 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. இன்னும் 400 ஏக்கர் துப்புரவாக்கப்பட்டுள்ளன.

முதலாவது 200 ஏக்கர் பயிரின் விளைச்சல் 1972-ல் அறுவடை தருமெனவும், 1974-லுக்கிடையில் ஆயிரம் ஏக்கரின் அறுவடையும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்குமெனவும் தெரிகிறது. பெண்களுக்கும் குறிப்பிட்ட சில காலங்களுக்கு வேலை கிடைக்கலாம்.

## சங்கத்தின் முன்மாதிரி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். மாநகரசபை ஊழியர் கூட்டுறவுக் கடனுதவிச் சிக்கனச்சங்கம், அண்மையில் அவர்களுக்கென இளைப்பாற்றி—இறப்புச் சகாயநிதித் திட்டமொன்றையும் ஏற்படுத்தியுள்ளது. இச்சங்கம் ஏற்கனவே, ஊழியர்களுக்கு அவர்கள் வீடுதிருத்தவும், கடன் மீட்கக்கூடியவகையில் ஒருவருட சம்பளத்தைக் கடனாக அளித்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பினால் வெற்றி கண்டார்

சங்கானை, செவ்.

"உலகிலே தோன்றிய பல அரசியற் கிளர்ச்சிகளுக்கும் அரசியல் வாதிகள் பலாத்காரத்தைப் பயன்படுத்தினார்கள். ஆனால் மகாத்மா காந்தியோ அன்பினாலே - அஹிம்சையினாலே அரசியலில் வெற்றிகண்டார் உலகிலே தோன்றி மறையும் எல்லோருக்கும் உலகம் நினைவு விழாக் கொண்டாடுவதில்லை. ஆகையால் அவர் தந்தகொள்கைகளைச் சிந்தித்து வாழ்க்கையிற் கடைப்பிடிக்க வேண்டும். இன்று செய்தவர்க்கும் இனியவை செய்து வாழ்க்கையில் வெற்றி காண வேண்டும்." என பூநகரி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற காந்தி ஜெயந்தி விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய அதிபர் திரு. மு. சிவானந்தம் குறிப்பிட்டார்.

பூநகரி கிராமசபை தலைவர் திரு. த. செல்லத்துரை பேசும்போது குறிப்பிட்டதாவது: "சமூகத்திலே ஏற்றத் தாழ்வுகள் இருப்பது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகும். மகாத்மா காந்தியின் வாழ்க்கையின் பெரும் பகுதி தீண்டாமையை ஒழிப்பதிலேயே கழிந்தது. நாமும் அமைதியான முறையில் சமூக முன்னேற்றத்திற்கான காரியங்களில் ஈடுபட வேண்டும்."

திருவாளர்கள் செ. சிவசக்திவேல், க. நீலகண்டன், சி. வைரவநாதன் ஆகியோரும் பேசினர். மறைந்த அதிபர் திரு. க. சேதுகாவலருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

## தமிழ்க்காங்கிரஸ் 13ல் கூடுகிறது

யாழ்ப்பாணம், புதன்

போதனாமொழி, இனக்கலவரம் சம்பந்தமாக இம்மாதம் 13ம் தேதி யாழ்ப்பாணத்தில் கூடும். தமிழ்க்காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.


இக்கூட்டத்தில் தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. எம். சிவசிதம்பரம் தற்போழுது அரசியல் நிலைமையை விளக்கிக்கூறுவார்.

பிள்ளைகளின் தாய்மொழியே போதனாமொழியாக இருக்கவேண்டும். என்பதைத் தமிழ்க்காங்கிரஸ் வலியுறுத்துமென அறியப்படுகிறது.

## உறுதுணையாளர் சங்கக் கூட்டம்

கோண்டாவில், செவ்வாய்

யாழ்ப்பாணம் உறுதுணையாளர் சங்க வருடாந்தக் கூட்டம் யாழ்ப்பாணம் புதிய செயலகத்தில் இம்மாதம் 11-ந் திகதி அரசாங்க அதிபர் திரு. வேணன் ஜயசேகரா தலைமையில் நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டக் காரியாதிகாரிகள் கலந்துகொள்வார்கள்.



2வது வெற்றி வாரம்!
கிங்ஸலி பிளாஸா நவா
(வெள்ளவத்தை) (கொம்பனித்தெரு)
ரிஜிதா ஜயா ஸ்ரீ கிருஷ்ணா
(ஹட்டன்) (மட்டக்களப்பு) (திருமலை)
மொடேர்ண் வெலிங்டன்
(பண்டாரவளை) (சாவகச்சேரி)
தீவொளி கல்யாணி
(நுவரெலியா) (நாவலப்பிட்டி)
எம். ஜி. ஆர்., கே. ஆர். விஜயா
சௌகார் ஜானகி, நாகேஷ். பாலையா
மற்றும் பலர் நடிக்கும்
ஆர். ஆர். பிக்சர்ஸ்
பணம் படைத்தவன்


## எதிர்க்கட்சியினர் தொடர்ந்து பகிஷ்கரிக்க முடிவு?

கொழும்பு, செவ்.

இம்மாதம் 8-ந் திகதி மீண்டும் பாராளுமன்றம் கூடும்போது எதிர்க்கட்சியினர் சபைக்கு செல்லமாட்டார்கள் எனத் தெரியவருகிறது. உப சபாநாயகர் திரு. ஷேர்லிகொரியா மீது எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்படவிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்திற்குஎடுத்தாலன்றி சபைக்குச் செல்வதில்லையென முடிவுசெய்துள்ளனர் என அறியப்படுகிறது.

உபசபாநாயகர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை, எதிர்க்கட்சியினர் சந்தித்து கலந்தாலோசித்த பின்னர் சபை லிகிதரிடம் விரைவில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

## கைத்தொழில்..,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் விளும்பட்டியலொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் அடங்காத சில முக்கிய விஷயங்கள் இருப்பின் அவற்றை சபையின் கவனத்துக்கு பொதுமக்கள் கொண்டுவரலாமெனவும் திரு. ஜெயவர்தன அறிவித்துள்ளார்.

தொழில் தகராறுசம்பந்தப்பட்ட விஷயங்களை விசாரணை தொடங்கிய காலத்திலிருந்து 6 வார காலத்துக்குள் நேரிலோ அல்லது எழுத்துமூலமாகவோ தெரிவிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது,

மேற்படி சபையில் திரு. டி. பி. பி. குணதிலகா, திரு. ஜெயதிலகா ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள். இச்சபையின் செயலாளர் திரு. பி. நவரத்தினம்.

## எக்ஸ்-ரே அன்பளிப்பு

உடுப்பிட்டி, செவ்.

மந்திகை அரசினர் வைத்தியசாலைக்குப் புதிய 'எக்ஸ்-ரே' நிலையமொன்றைப் பருத்தித்துறையைச் சேர்ந்த திரு. பீ. வீரபாகு என்பவர் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இதனைச் சுகாதாரஅமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. எஸ். பாலசிங்கம் பாரமெடுத்துள்ளார்.


REGAL—JAFFNA
NOW SHOWING
ROGER BROWNE
SCILLIA GABLE
in
M-G-M's
THE REVENGE OF
SPARTACUS
(Technicolor)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4-45, 7-00, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
PRISONER OF THE
IRON MASK

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி!
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எஸ். எஸ். ஆர். - தேவிகா
நடித்த
அன்பு எங்கே?

மகாத்மா தியேட்டர்
(நெல்லியடி)
தினசரி 6-30, 9-30
போயாதினங்களில் காலை 10 மணி
சிவாஜி — சாவித்திரி
நடித்த
திருவிளையாடல்


## பாடசாலைக்கு விஞ்ஞான உபகரணங்கள்

வல்வெட்டித்துறை, செவ்

தொண்டமானாறு இந்து ஆங்கில பாடசாலையில் முதன் முதலாக விஞ்ஞானம் கற்பிப்பதற்காக விஞ்ஞானம் சம்பந்தமான உபகரணங்களை கல்விப்பகுதியினர் அனுப்பி வைத்துள்ளனர். பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் எடுத்த முயற்சியின் பேரிலேயே இவை அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது,

## எதிரிகள் விடுதலை

வல்வெட்டித்துறை, செவ்.

கடந்த ஆடி மாதம் 7-ந் திகதி புலோலி கிழக்கைச் சேர்ந்த சூசை அந்தோனிப் பிள்ளை என்பவருடைய வீட்டு வளவிற்குட் புகுந்து வீட்டிற்கு கல்லால் எறிந்தும், வாயிற் கேற்றை உடைத்தும் அவருக்கு அடித்துக் காயம் விளைவித்ததாகவும் அதேயிடத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை, தோமாஸ, மனுவேல் பிள்ளை, துரையன், பாபு, இராசமணி, அக்கினியேஸ், பாக்கியம் ஆகிய எண்மர் மீதும்பருத்தித்துறைபொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. றுபேர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சவரிமுத்து அன்னம்மா சாட்சியமளித்தபின் மாஜிஸ்திரேட் எதிரிகள் எண்மரையும் சுற்றவாளிகளாகக் கண்டு விடுதலை செய்தார்.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. எம். வேலும் மயிலும் ஆஜரானார். பருத்தித்துறை பொலிஸ் சார்ஜண்ட் திரு. கிருஷ்ணசாமி வழக்கை நடத்தினார்.

## இந்துக்கல்லூரி வெற்றி

உடுப்பிட்டி, செவ்.

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் மூன்றாவது கோஷ்டியில் யாழ். இந்துக்கல்லூரி நெல்லியடி மத்திய கல்லூரியை 5—0 கோல்களால் வெற்றியீட்டியது. மத்தியஸ்தராக உடுப்பிட்டி அ. மி. கல்லூரி உடற் பயிற்சி ஆசிரியர் திரு. என், ஜெயராஜா கடமையாற்றினார்.

## திருப்தியான படகு சேவை

ஊர்காவற்றுறை, புதன்

புங்குடுதீவு, குறிகாட்டுவான், நெடுந்தீவு படகு சேவை கடந்த சில தினங்களாகத் திருப்திகரமாக நடைபெற்று வருகிறது.

தீவுப்பகுதிக் காரியாதிகாரியும், கிராமசேவகரும் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து தற்போது 'சில்வாஸ்பிறே', 'ஏலாரா' என்ற இரு யந்திர மோட்டார் படகுகள் நியமமாக வேலை செய்து வருகின்றன.

## பாதுகாக்கவே சுதந்திரம்

உடுப்பிட்டி, செவ்.

பருத்தித்துறை தமிழரசு வாலிபமுன்னணியாரால் காந்திநினைவுதினம் கொண்டாடப்பட்டது. திரு. எம். வேலும் மயிலும் காந்திஜி நினைவு விழாவுக்குத் தலைமை வகித்தார். அவர் தமதுரையில், "ஒரு நாட்டின் சுதந்திரம் பாதுகாக்கவே அளிக்கப்பட்டது. அந்நாட்டிலுள்ள சகல சிறுபான்மை இனமும் பாதுகாக்கப்படல் வேண்டும். தமிழ் - சிங்கள ஒற்றுமை சுமுகமாக ஏற்படின் காந்திஜியின் போதனைகட்கு நாம் நன்றி செலுத்தவேண்டியவர்களாவோம்" என்று குறிப்பிட்டார். பருத்தித்துறை நகர மத்தியிலுள்ள காந்தி சிலைக்கு மலர்மாலைசூட்டி அஞ்சலி செய்யப்பட்டது. வேறு பலரும் பேசினர்.

## பெற்றோரின் பங்கு

உடுவில், செவ்வாய்

"இளைஞர் சமுதாயத்தினை வளர்த்தெடுக்கும் பொறுப்பு அரசாங்கத்திலோ, எம். பிகளிலோ மட்டும் தங்கியிருக்கவில்லை. அதில் பெற்றோர்களுக்கும் பெரும் பொறுப்பு உண்டு" என்று உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் புதிதாக கட்டப்பட்ட பாலர் வகுப்பு நிலைய கட்டிடத்தை திறந்து வைத்துப் பேசிய உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் கூறினார். பாடசாலையின் அதிபர் திரு. சி. கதிரவேலு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் திரு. தர்மலிங்கம் தொடர்ந்து பேசியதாவது:

"வளர்ந்து வரும் இளம் சந்ததியினருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து அவர்களை மேல் நிலை அடையச் செய்யும் பொறுப்பை பெற்றோர்கள் அரசாங்கத்திடமோ, எம். பி.களிடமோ மட்டும் விடுதல் கூடாது. அவர்களும் அதில் பெரும் பங்கு எடுக்கவேண்டும்.

வருடத்திற்கு 3000 ரூபா மட்டுமே ஒரு தொகுதிப் பாடசாலைகளுக்காக அரசாங்கத்தால் ஒதுக்க முடிகின்றது. இதனைக்கொண்டு எல்லாப் பாடசாலைகளையும் புனரமைப்பு செய்துவிடல் முடியாத காரியம். எனவே, அதற்கும் பெற்றோர் ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியம் வேண்டும்".

## சொலிசிட்டர்....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பிட்டிருந்தது ஏற்றுக்கொள்ளமுடியாததுஎனவும் வாதாடினார்.

1956-ம்வருடத்துக்குமுன் அரசாங்க சேவையில் சேர்ந்த ஊழியர்களுக்கு சிங்களம்மட்டும் சட்டம் காரணமாக சம்பள உயர்வு நிறுத்தப்படமுடியாது என திரு. கோடீஸ்வரன் தொடர்ந்திருந்த வழக்கை விசாரணை செய்த மாவட்ட நீதிபதி திரு. கிறெஸ்டர் கோடீஸ்வரனின் தரப்பு வாதத்தை ஏற்று முன்னர் தீர்ப்பளித்திருந்தார்.

அப்பீல் வழக்கில் திரு. கோடீஸ்வரன் சார்பில் சி. ரெங்கநாதன் ஆஜரானார். விசாரணை நாளை தொடர்ந்து நடைபெறும்.

## மத்திய பிரதேசத்துக்கு மேல்சபை

புதுடில்லி, அக். 4

மத்திய பிரதேசத்தில் விரைவில் புதிய மேல்சபை ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இச்சபையில் 90 அங்கத்தவர்கள் அங்கத்துவம் வகிப்பார்கள்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org